REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 13 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 111 | Friday 13, May, 2022 | 12 பக்கங்கள் | 40/-

## பிரதமர் ரணிலுக்கு மஹிந்த வாழ்த்து

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ட்விட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க பதவியேற்று ஒரு சில நிமிடங்களிலேயே மஹிந்த ராஜபக்ஷ புதிய பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவசரகால சட்டம்; துப்பாக்கிச் சூடு

## இரண்டு அதிகாரத்தையும் இரத்துச்செய்ய கோரல்

**சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள்**

இலங்கை அரசாங்கம் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அதிகளவு அதிகாரங்களை வழங்கும் அவசரகாலநிலையையும் துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபடுவதற்கான அதிகாரங்களையும் இரத்துச்செய்யவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களின் மனித உரிமைகள், கௌரவம், பாதுகாப்பு

08

## நாட்டை முன்னோக்கி நகர்த்த புதிய அரசுக்கு பூரண அதிகாரம்

**டுவிட்டரில் ஜனாதிபதி கோட்டாபய பதிவு**



அமையவுள்ள புதிய அரசாங்கத்திற்கு புதிய திட்டங்களை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்படும். அத்துடன், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான அதிகாரம் அளிக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், 19வது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கங்களை மீண்டும் நிறைவேற்றி, பாராளுமன்றத்திற்கு மேலும் அதிகாரம் அளிக்கும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

08

## இலங்கை மக்களுக்கு உதவ திமுக எம்.எல்.ஏ.க்கள் ஒரு மாத சம்பளம்

**ரூ.1 கோடி 30 இலட்சம் முதல்வரிடம் ஒப்படைப்பு**



திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் திமுக எம்.எல்.ஏ.க்கள் சார்பில் ஒரு மாத ஊதியம் நிதியுதவியாக ரூ. 1 கோடியே 30 இலட்சத்து 20 ஆயிரம் (இந்திய) ரூபாய்க்கான காசோலையை அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், முதல்வர்

08

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில்

# ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்பு

**புதிய அமைச்சரவை இன்று அல்லது நாளை பதவியேற்கவுள்ளது**





**புதிய அரசாங்கத்தை அமைக்க பாராளுமன்றில் 130 உறுப்பினர்களுடன் பெரும்பான்மையை அவர் கொண்டுள்ளமை உறுதி**

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் புதிய பிரதமராக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விசேட நிகழ்வின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிய பிரதமராக அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

சத்திய பிரமாணத்தையடுத்து புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்ளுப்பிட்டி வாலுக்காராம விஹாரை மற்றும் கங்காராம விகாரைக்கும் விஜயம் செய்து பௌத்த தேரர்களின் ஆசியைப் பெற்றுக் கொண்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் தற்போது 130 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள்

08

மஹிந்த, நாமல், ஜோன்ஸ்டன் உட்பட

## 17 பேருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை



லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 17 பேருக்கு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று

08

## ரணிலின் அமைச்சரவையில் ஒருபோதும் பங்கேற்கோம்

**SJB செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார**



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சு பொறுப்புக்களை ஏற்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்ரமசிங்கவின் அமைச்சரவையில் இணைவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

08

DIG தேசபந்து தென்னக்கோன்

## மனித உரிமை ஆணைக்குழு முன் இன்று ஆஜராகி வாக்குமூலம் அளிக்க அழைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இன்று மனித உரிமை ஆணைக்குழுவில் ஆஜராகவுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்பாக இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பில் சாட்சியம் ஒன்றை பதிவு செய்து கொள்வதற்காகவே மனித உரிமை ஆணைக்குழு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

நேற்றைய தினம்

08

பசில், நடேசனுக்கு எதிரான

## மல்வானை காணி விவகார வழக்கு விசாரணை இன்று





முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமரன் நடேசன் ஆகியோருக்கு எதிராக அரச நிதி முறைக்கேடு தொடர்பில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 வழக்கு விசாரணைகளை தொடர்வதா, இல்லையா என்பது தொடர்பில் கம்பஹா மேல் நீதிமன்றம் இன்று (13) தீர்மானத்தை அளிக்கவுள்ளது.

தொம்பே, மல்வானை மாபிடிகம பிரதேசத்தில்

08

## நான் தெரிவித்த கருத்து சமூக ஊடகங்களில் திரிபு

**ஹரீன் எம்.பி. கவலை**



நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் சஜித் பிரேமதாசவோ அல்லது அநுரகுமார திசாநாயக்கவோ பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று நாட்டை நிர்வகிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

காணொளி ஒன்றை வெளியிட்டு அவர் இதனைக்

08

ஜனாதிபதி மீதான

## நம்பிக்கையில்லா விவாதம் மே 17இல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)




ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் பாராளுமன்றில் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் மீதான “விருப்பின்மை” (நம்பிக்கையில்லா) தீர்மான விவாதத்தை நிலையியல் கட்டளைகளை ஒத்திவைத்து நடத்த நேற்று (12) காலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின்

08

## மாஸ்டர் சிவலிங்கம் இயற்கை எய்தினார்

**நேற்று அக்கினியுடன் சங்கமம்**



மட்டக்களப்பின் கதைச் சிற்பி மாஸ்டர் சிவலிங்கம் நேற்று முன்தினம்(11) இயற்கை எய்தினார்.

‘வானொலி மாமா’ என்று பிரபலமாகப் பேசப்படும் மாஸ்டர் இ.சிவலிங்கம், வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் சிறுவர்களுக்கான கதை கூறுதலை ஓயாது

08



### நான் இன்னும் சாகவில்லை சமாதி மனநிலையில் உள்ளேன்

வதந்திகளுக்கு நித்யானந்தா பதில்

03



### அரசியல் தீர்வை எட்டுவதற்கு ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

JVP செயலாளர் ரில்வின் சில்வா

03



நினைவேந்தல் வாரம் மே–18 இல்

### நல்லூரில் ஆவணங்கள் காட்சிப்படுத்தல் ஆரம்பம்

03

வேறு ஏதாவது காரணம் உள்ளதா?

## காலிமுகத்திடலில் சஜித் மீது மட்டும் தாக்குதல் ஏன்?

**சந்தேகம் வெளியிடும் கமல் குணரட்ன**



காலிமுகத்திடலில் சஜித் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் ஏதாவது காரணங்கள் இருக்கும் என பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ன சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

08

## அமெரிக்க டொலர் ரூ.380 க்கு விற்பனை

**கொள்முதல் விலை ரூ.365 ஆக பதிவு**



உரிமம் பெற்ற சில வணிக வங்கி கள் நேற்று (12) அமெரிக்க டொல ரின் விற்பனை விலையை 380 ரூபாவாக நிர்ணயித்துள்ளன.

டொலரின் கொள்முதல் விலை 365 ரூபாவாக பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை இன்னமும் 374 ரூபா 99 சதமாகவே உள்ளது. அதன் கொள்முதல் விலை 361 ரூபா 72 சதமாக காணப்படுகிறது.

நாட்டின் எதிர்காலத்திற்கு 13 முன்மொழிவு

## தமிழர் அரசியல் தீர்வு விடயத்தை உள்ளடக்குக

**பல்கலை மாணவர் ஒன்றியத்திடம் சாணக்கியன் MP**



வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு சார்ந்த விடயங்களை உள்ளடக்கம் செய்யாத ஒரு எதிர்காலம் இலங்கையில் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின்

08

## அரசில் எந்தவொரு பதவியையும் நான் ஏற்கப்போவதில்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தின் கீழ் உருவாக்கப்படும் அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு பதவியையும் ஏற்றுக் கொள்வதற்கு தாம் தயாரில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட

08

# சர்வதேச செய்திகள்



## உக்ரைனின் ஹெர்சன் நகர் ரஷ்யாவுடன் சேர விருப்பம்




உக்ரைனின் தெற்கில் உள்ள ஹெர்சன் நகரம் ரஷ்யாவுடன் இணைய விரும்புவதாக அதன் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அந்நகரை இணைத்துக்கொள்ளும்படி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடம் கேட்கப்போவதாக அவர்கள் தெரிவித்தனர்.

அந்த யோசனையை ரஷ்யா வரவேற்கிறது. ஹெர்சன் நகரின் எதிர்காலத்தை அந்நகரமே முடிவு செய்ய வேண்டும் என்று ரஷ்யா கூறியது.

அப்பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்தும் சாத்தியம் உள்ளது. அது ரஷ்யாவின் படையெடுப்புக்கு ஒருவகையான சட்டபூர்வ அங்கீகாரத்தை வழங்கும் வகையில் அமையும்.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமான உக்ரைனியப் படையெடுப்பில் ரஷ்யாவிடம் வீழ்ந்த முதல் நகரம் ஹெர்சன் ஆகும்.

ஆண்டு இறுதிக்குள் அந்நகரம் முழுமையாக ரஷ்யாவின் சட்டத்துக்கு உட்பட்டுவிடும் என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹெர்சன் நகரம் 2014 ஆம் ஆண்டில் ரஷ்யா கைப்பற்றிய உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தின் வடக்கில் அமைந்துள்ளது. தீபகற்பத்திற்கான குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத்திற்கு இந்த நகர் அவசியமானதாக உள்ளது.

## வட கொரியாவில் முதல் கொவிட் சம்பவம்: கடும் கட்டுப்பாடு அமுல்



வட கொரியாவில் முதல் கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் கண்டிப்பான தேசிய முடக்க நிலை ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் பியொங்யானில் ஒமிக்ரோன் தொற்று சம்பவம் அடையாளம் காணப்பட்டிருப்பதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டபோதும், அதன் எண்ணிக்கை பற்றி குறிப்பிடப்படவில்லை.

வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன் இந்தத் தொற்றை முற்றாக ஒழிப்பதாக உறுதி அளித்திருப்பதோடு கடுமையான தேசிய அவசர நிலை ஒன்றை அறிவித்துள்ளார்.

எனினும் வட கொரியாவில் நோய்த் தொற்று நீண்ட காலமாக இருந்து வருவதாக கவனிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வரட்சியால் வாடும் வட கொரியாவில் இதற்கு முன்னர் வைரஸ் தொற்று ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை. வைரஸ் பரவல் ஆரம்பித்தபோதே வட கொரியா, அதன் எல்லைகளை மூடிவிட்டது.

அண்மையில் அங்கு காய்ச்சல் கண்ட நோயாளிகள் சிலரிடமிருந்து பெறப்பட்ட உயிரியல் மாதிரிகளின் மூலம் ஒமிக்ரோன் வகை வைரஸ் திரிபு ஏற்பட்டது தெரியவந்தது.

அது தொடர்பில் உயரதிகாரிகள் அவசரச் சந்திப்பொன்றை நடத்தினர். அதையடுத்து, மிகக் கடுமையான நெருக்கடி நிலையை எதிர்நோக்கும் நடைமுறை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வட கொரியாவின் 25 மில்லியன் மக்கள்தொகையில் எவருக்கும் நோய்த்தொற்றுக்கு எதிரான தடுப்பூசி போடப்படவில்லை என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

உலக சுகாதார அமைப்பு, சீனா, ரஷ்யா ஆகியவை வழங்க முன்வந்த தடுப்புமருந்துகளைப் பெற வட கொரியா மறுத்துவிட்டது.

இந்த செய்தி வெளியானதை அடுத்து மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு தென் கொரியா முன்வந்துள்ளது. எனினும் வட கொரியா இது தொடர்பில் இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை.

## அமெரிக்காவில் விலை உயர்வில் சற்று வீழ்ச்சி



அமெரிக்காவில் பெற்றோல், பயன்படுத்தப்பட்ட கார்கள் மற்றும் ஆடைகளுக்கான விலைகள் சரிந்த நிலையில் கடந்த ஏப்ரலில் விலை அதிகரிப்பு வேகத்தில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வருடாந்த பணவீக்க வேகம் கடந்த மார்ச் மாதம் 8.5 வீதமாக இருந்த நிலையில் கடந்த மாதம் அது 8.3 வீதமாக பதிவானது என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த பல மாதங்களில் பதிவான முதல் சரிவாக இருந்த போதும் விலை அதிகரிப்பு வேகம் கடந்த 40 ஆண்டுகளில் தொடர்ந்தும் உச்சத்தில் உள்ளது.

மளிகை பொருட்கள், வீட்டு வசதிகள் மற்றும் விமான டிக்கெட்டுகள் போன்ற பொருட்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் அரசு மீது அதிக அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பு எதிர்பார்க்காத உச்சத்தில் தொடர்ந்து இருப்பதாக குறிப்பிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பணவீக்கத்தை குறைப்பதற்கு உள்நாட்டில் தாம் முதன்மையாக முன்னுரிமை அளிப்பதாக உறுதி அளித்தார்.

## அனுபவமே இன்றி விமானத்தை வெற்றிகரமாக இயக்கிய பயணி



அமெரிக்காவில் சிறிய ரக விமானத்தை இயக்கிய விமானிக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதால், இதுவரை பறக்கும் அனுபவமே இல்லாத பயணி ஒருவர் விமானத்தை பத்திரமாக தரையிறக்கியுள்ளார்.

பஹாமாஸில் உள்ள மார்ஷ் துறைமுகத்தில் உள்ள லியோனார்ட் எம். தொம்சன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 2 பயணிகளுடன் புறப்பட்ட செஸ்னா 208 கேரவன் விமானம், புளோரிடாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அப்போது விமானத்தை இயக்கிய விமானிக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு செயலற்று கிடந்துள்ளார்.

இதனையடுத்து நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த பயணி ஒருவர் விமானத்தை இயக்க முடிவு செய்தார். அதன்படி விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்ந்து இணைப்பில் இருந்தபடி, அவர்கள் கூறுவதை கேட்டு விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார்.

பெயர் குறிப்பிடப்படாத அந்த நபர் தனது கர்ப்பிணி மனைவியைப் பார்க்க வீட்டிற்குச் சென்று கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

## சீனத் தலைநகரில் வைரஸ் கட்டுப்பாடு மேலும் தீவிரம்



சீனத் தலைநகர் பீஜிங்கில் மக்கள் பொது இடங்களுக்கு நுழையும் முன்னர், 2 நாட்களுக்குள் எடுக்கப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனை முடிவுகளைக் காண்பித்து வைரஸ் தொற்று இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும்.

புதிய விதிமுறை நேற்று வியாழக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வந்தது.

அதிவேகமாகப் பரவிவரும் ஒமிக்ரோன் வைரஸ் திரிபை கட்டுப்படுத்தும் நோக்கில் அதிகாரிகள் வைரஸ் தொற்றுப் பரிசோதனை நடைமுறைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

புதிய பயணக் கட்டுப்பாடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

பீஜிங்கில் கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 40க்கும் அதிகமானோரிடம் தொற்று அடையாளம் காணப்பட்டது.

கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக வாடகைக் கார் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சுரங்க ரயில், பஸ் பாதைகளும் மூடப்பட்டுள்ளன.

அதனால் பலரும் போக வேண்டிய இடத்துக்குச் சொந்த வாகனங்களில் போகின்றனர். அதிகமானோர் நடந்து செல்கின்றனர் அல்லது சைக்கிள்களை பயன்படுத்துகின்றனர்.

# கிழக்கின் குரல்



## வன்முறையாளர்களை கைது செய்யுமாறு கோரி போராட்டம்





மட்டக்களப்பு விசேட நிருபர்

ஏறாவூர் புன்னைக்குடா வீதியை அண்டி அமைந்துள்ள ஆடைத் தொழில்சாலை சேதமாக்கப்பட்டுள்ளதை கண்டித்து பணியாளர்கள் நேற்று (12) கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (10) வன்முறைக் கும்பலால் தாக்கி அங்கிருந்த அதி நவீன ஆடைத் தொழில் இயந்திரங்கள், மின் பிறப்பாக்கிகள், ஜன்னல் கண்ணாடிகள் உட்பட ஏனைய உபகரணங்களும் அடித்து நொறுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தன. தொழில்சாலை மீண்டும் இயங்க முடியாதளவிற்கு சேதமாக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் வியாழக்கிழமை தளர்த்தப்பட்டதையடுத்து ஆடைத் தொழில்சாலைக்கு மீண்டும் பணிக்குத் திரும்பிய பணியாளர்கள் தமது ஆடைத் தொழில்சாலை சேதமாக்கி அழிக்கப்பட்டிருப்பதைக் கண்டு சம்பந்தப்பட்ட வன்முறையாளர்களைக் கைது செய்யுமாறு கோரி கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'நீதி நிலைநாட்டப்பட வேண்டும். ஏழைகளின் வாழ்வாதாரத்தை அழித்தொழிக்கும் வன்முறையாளர்களை கைது செய். வன்முறை நிறுத்தப்பட வேண்டும்'. 'எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்'. 'அரசியலுக்கும் ஆடைத் தொழிற்சாலைக்கும் வித்தியாசம் தெரியாத முட்டாள்கள்' உள்ளிட்ட இன்னும் பல கோஷங்களைக் கொண்ட பதாகைகளை கவன ஈர்ப்பாளர்கள் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தளவாய் ஆடைத் தொழில்சாலையிலிருந்து புறப்பட்ட பணியாளர்கள் ஏறாவூர் பொலிஸார் வன்முறையாளர்களைக் கைது செய்ய வேண்டுமெனக் கோரி புன்னைக்குடா வீதி வழியே ஏறாவூர் பொலிஸ் நிலையம் வரை நடைபவனியாக இந்த கவனி ஈர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் இடைவழி மறித்த பொலிஸ் அதிகாரிகளும் படையினரும் கவன ஈர்ப்பாளர்களின் கோரிக்கையை ஏற்பதாகவும் முன்னதாகவே வன்முறையில் ஈடுபட்டோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

காணொளி ஆதாரங்களுடன் வன்முறைக் கும்பலைக் கைது செய்யும் சட்ட நடவடிக்கைகள் ஏற்கெனவே தொடங்கி விட்டதாகவும் கவன ஈர்ப்புப் போராட்டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறும் வேண்டிக் கொண்டனர். இதனையடுத்து கவன ஈர்ப்புப் போராட்டக்காரர்கள் மீண்டும் தமது ஆடைத் தொழிற்சாலைகளுக்குச் சென்றனர்.

## விபத்தில் இளைஞன் பலி வவுணதீவில் சம்பவம்

மணல்சேனை நிருபர்

வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வவுணதீவு நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் விபத்தில் சிக்கி நேற்று முன்தினம் மாலை (11) உயிரிழந்துள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுணதீவு நாவற்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த (22) வயதுடைய ராஜேந்திரன் செந்தூரன் என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று ஆயித்திய மாலை பிரதேசத்துக்கு சென்று தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பட்டை இழந்து வீதியில் உள்ள மின்சார தூணில் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுணதீவு போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடல் நீர் உட்புகுந்ததால் உளுந்து, நிலக்கடலை பயிர்ச் செய்கை பாதிப்பு



கல்முனையில் தீடிரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாக கடல் நீர் உட்புகுந்ததால் கல்முனை விவசாய விரிவாகல் பிரிவில் பயிரிடப்பட்ட உளுந்து,நிலக்கடலை என்பன பாதிக்கப்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

'சௌபாக்கியா' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உப உணவு பயிர் செய்கையை அதிகரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை அன்பு சகோதர இல்லத்தில் நிலக்கடலை பயிரிடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் (10) தீடிரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாக கடல் நீர் உட்புகுந்ததால் சுமார் அரை ஏக்கரில் பயிரிடப்பட்ட நிலக்கடலை பயிர் பாதிப்படைந்ததாக விவசாயி எஸ்.நல்லதம்பி தெரிவித்தார்.

இந் நிலையில் மற்றுமொறு நிலப்பரப்பில் சுமார் ஒன்றரை ஏக்கரில் பயிரிடப்பட்ட உளுந்து செய்கைக்குள்ளும் கடல் நீர் உட் புகுந்த நிலையில் முற்றாக உளுந்து பயிர் பாதிப்படைந்ததாக விவசாயி கே.கிருபாகரன் தெரிவித்தார்.

## தினகரன் நிருபர் அரூஸின் தாயார் காலமானார்

ஒலுவில் மத்திய விசேட நிருபர்

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை 09 ஆம் பிரிவைச் சேர்ந்த அப்துல் மஜீத் கலிமத்தும்மா நேற்று (2022.05.12) காலமானார். இவர் மர்ஹூம் ஏ.பி. சம்சுதீன் அவர்களின் மனைவியும், ஆசிரியர் எஸ் கியாஸ், எஸ். அரூஸ் (தினகரன் ஊடகவியலாளர்), எஸ். அஹூஜான் மற்றும் றிஸ்மிலா ஆகியோரின் தாயாரும், மர்ஹூம் வி.ரி. எம். ஹனீபாவின் (மௌலவி_ முன்னாள் அட்/தேசிய பாடசாலை அதிபர்) மாமியாரும் ஹஸ்ஸான் றுஷ்தியின் (சட்டத்தரணி) உம்மம்மாவும் ஆவார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் 2022.05.12 ஆம் திகதி மாலை அட்டாளைச்சேனை பொது மையவாடியில் நடைபெற்றது. ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## பணி பகிஷ்கரிப்பில் கல்விசாரா ஊழியர்கள்

ஒலுவில் விசேட நிருபர்

தென்கிழக்குப் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை (12) தொடக்கம் 48 மணித்தியால பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக, தென்கிழக்குப் பல்கலைக்ககழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.எம்.நௌபர் தெரிவித்தார். சாத்வீகமான மக்கள் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களை கண்டித்து இவ் பணி பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அகில இலங்கை பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் கூட்டுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் 48 மணிநேர தொடர்ச்சியான அடையாள பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இப் பணிப் பகிஷ்கரிப்பானது ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் பட்சத்திலும் தொடர்ச்சியாக 48 மணி நேரம் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மே 13 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.35
லுஹர் - 12.08
அஸர் - 03.28
மஃரிப் - 06.20
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 30
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# புதிய அரசாங்கத்துடன் கொள்கைமட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்

## – சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

இலங்கையுடன் தொழில்நுட்ப மட்டக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் கொள்கைமட்டப் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி தமது கொள்கைகளுக்கு அமைவாக இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நிகழ்நிலையின் ஊடாக இம்மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ள செயற்திட்டத்தின் பிரகாரம், இலங்கையுடனான தொழில்நுட்பமட்டக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் இவை ஏற்கனவே திட்டமிடப்பட்டவாறு தொடரும்.

அதன் மூலம் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் கொள்கைமட்டப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்குத் தயாரான நிலையில் இருக்கமுடியும் என்று சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கையின் தற்போதைய நிலைவரங்களை உன்னிப்பாக அவதானித்துவருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச நாணய நிதியம், தீவிரமடைந்துவரும்

08

நெருக்கடிநிலையில் சட்டவிரோதமாக:

# இந்தியாவுக்குள் பிரவேசிக்க முயலும் இலங்கையர்கள் தொடர்பில் கண்காணிப்பு

## தமிழக பொலிஸார் விசேட நடவடிக்கை

இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடிநிலையில் தமிழ் மக்கள் மட்டுமன்றி ஏனையவர்களும் சட்டவிரோதமாக இந்தியாவுக்கு பிரவேசிப்பதற்கு முயற்சித்து வருவதாகவும் அதனைத் தடுக்கும் வகையில் இந்திய கடற்பரப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

அதனையடுத்து இந்திய கடல் பகுதியிலும் கடற்கரை பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் நிலவும் நெருக்கடிநிலை காரணமாக தமிழ்மக்கள் மட்டுமன்றி சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் இந்தியாவுக்குள் பிரவேசிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் அதேவேளை சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்றுள்ள சிறைக்கைதிகளும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட மோதல் சம்பவங்களின் போது வட்டரக்க சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்றுள்ள 50 சிறைக்கைதிகள் பாதுகாப்பு படையினரிடமிருந்து தப்புவதற்காக இந்தியாவுக்குள் பிரவேசிப்பதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கிணங்க தமிழ்நாட்டின் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் மீன்பிடி படகுகள் தரித்து நிற்கும் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன்

08

ஜனாதிபதியால் உடனடியாக பதவி விலக முடியாது:

# கால அவகாசம் வழங்க வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் அலிசப்ரி



ஜனாதிபதியால் உடனடியாக பதவி விலக முடியாது, அவருக்கு சற்று கால அவகாசம் வழங்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் அல்லது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் பதவி விலகும் குறுகிய காலத்தை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். அவர் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்க முடியாது என கட்சி தலைவர் கூட்டத்தில் எதிர்த்தரப்பினர் வலியுறுத்திய போதே முன்னாள் அமைச்சர் அலிசப்ரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முறையான அலுவல்கள் இல்லாத காரணத்தினால் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான கூட்டத்தை கூட்ட முடியாது என சபாநாயகர் குறிப்பிட்டபோது அநுர குமார திஸாநாயக்க, அரசாங்கம் தான் பதவி விலகியுள்ளதே தவிர பாராளுமன்றம் கலைக்கப்படவில்லை.

ஆகவே பாராளுமன்ற விவகாரம் தொடர்பான கூட்டத்தை கூட்டுங்கள் என

08

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ்

# யூரியா பெற்றுக்கொள்வதை விரைவுபடுத்த உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நடவடிக்கை




புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய உரத் திணைக்களத்தின் செயலாளர் ஸ்ரீ ராஜேஷ் குமார் சதுர்வேதியை நேற்று (12) சந்தித்து இலங்கையின் தற்போதைய பயிர்ச்செய்கைப் பருவத்திற்குத் தேவையான யூரியாவை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடினார்.

தற்போதுள்ள ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ், தற்போதய பயிர்ச்செய்கைப் பருவத்தில் நெற்பயிர்க்கான மொத்தத் தேவையான 65,000 மெட்ரிக் தொன் யூரியாவை உடனடியாக இலங்கைக்கு வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்ததை அடுத்து இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் இருந்து யூரியா ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த அளவு யூரியாவை உடனடியாக இலங்கைக்கு வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லேயுடன் கலந்தாலோசித்து 65,000 மெட்ரிக் தொன் யூரியாவை இலங்கைக்கு வழங்குவதற்குத் தேவையான அனுமதிகள் மற்றும் தளவாடங்களை ஏற்பாடு செய்வதில் செயலாளர் சதுர்வேதியின் தனிப்பட்ட ஈடுபாட்டிற்காக உயர் ஸ்தானிகர் மொரகொட நன்றி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஸ்ரீ சதுர்வேதி, இந்தியாவின் 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற கொள்கையின்படி இலங்கைக்கு ஆதரவளிக்க தனது திணைக்களம் எப்போதும் தயாராக இருப்பதாகவும், அருகிலுள்ள துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு தேவையான அளவு யூரியாவை ஒரு மாநிலத்தின் மூலம் அனுப்புவதற்கான ஏற்பாடுகளை திணைக்களம் செய்து வருவதாகவும் கூறினார். உயர்ஸ்தானிகரும் செயலாளரும், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இரசாயன உரத்தை தற்போதுள்ள கடன் வரியின் கீழ் மற்றும் அதற்கு அப்பால் தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடினர்.



# நடந்த சம்பவங்களுக்காக வருத்தம் தெரிவிக்கும் நாமல்

## தனது முகநூலில் உருக்கமான பதிவு

அண்மைய சம்பவங்களில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ முகப்புத்தக தளத்தில் அவர் இது தொடர்பில் பதிவொன்றை இட்டுள்ளார். இந்த துயரமான சம்பவங்களில் உயிரிழந்தவர்களின்

08

நினைவேந்தல் வாரம் மே – 18 இல்;

# நல்லூரில் ஆவணங்கள் காட்சிப்படுத்தல் ஆரம்பம்



08

# அரசியல் தீர்வை எட்டுவதற்கு ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

## JVP செயலாளர் ரில்வின் சில்வா

லோரன்ஸ் செல்வநாயகம்



எத்தகைய அரசியல் தீர்வை எட்டுவதற்கும் முதலில் ஜனாதிபதி தமது பதவியை இராஜினாமா செய்வது அவசியம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா

08

# நான் இன்னும் சாகவில்லை சமாதி மனநிலையில் உள்ளேன்

## வதந்திகளுக்கு நித்யானந்தா பதில்



தான் உயிருடனே இருப்பதாகவும், மருத்துவர்கள் கண்காணிப்பில் இருப்பதால் வழக்கம்போல் செயல்பட சில காலம் பிடிக்கும் என்றும் நித்யானந்தா விளக்கம் அளித்துள்ளார். பல்வேறு சர்ச்சையில் சிக்கிய நித்யானந்தா எங்கே போனார் என்று பொலிஸ் தேடிக்கொண்டிருந்தபோது,

08


# விலைமனுக்களுக்கான அழைப்பின் திருத்தம்

CRIWMP

## காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்

### நீர்ப்பாசன அமைச்சு

**குறிப்பு:** 2022 ஏப்ரல் 20ஆம் திகதி தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரமான விளம்பரம் தொடர்பானது.

**விலைக்கோரல் இல.: CRIWMP/PMU/PROC/2022/SER/04**

**பின்வரும் வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்கான விலைமனு கோரல்**

a. Lot No 01- Double Cabs 4 WD
கொழும்பு/அநுராதபுர அலுவலகத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கானது **- 03 x Nos.**

b. Lot No 02- Double Cabs 4 WD
கொழும்பு/அநுராதபுர அலுவலகத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கானது **- 03 x Nos.**

c. **Lot No.03 – Nine (09) seater dual A/C Vans**
கொழும்பு/அநுராதபுர அலுவலகத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கானது **- 02 x Nos.**

முன்னர் திட்டமிடப்பட்ட திகதிகளில் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக மேற்படி ''விலைமனுக்களுக்கான அழைப்பில்'' பின்வரும் கால எல்லைகள் பின்வரும் வகையில் திருத்தப்படுகின்றன.

A) விலைமனுக்கள் வழங்கப்படும் காலம் 2022 மே 17ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

B) விலைமனுக்கள் திறக்கப்படும் மற்றும் மூடப்படும் திகதி மற்றும் நேரம் - மேற்குறிப்பிடப்பட்ட அதே இடத்தில் 2022 மே 18ஆம் திகதி பி.ப. 2.00 மணி எனத் திருத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுக் கோரல் அழைப்பில் உள்ள ஏனைய சகல விபரங்களிலும் எவ்வித மாற்றமுமில்லை. ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தால் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கப்படுகின்றது.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜயா மாவத்தை, கொழும்பு-10**



## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 மே 18ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 90,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122H196 | LKA18222K189 | LKA36423E192 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 50,000 | 20,000 | 20,000 | 90,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 மே 18
தீர்ப்பனவுத் திகதி : 2022 மே 20
வழங்கப்படும் திகதி : 2022 மே 20
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 மே 18, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும்.

# அரசியல் ஸ்திரப்பாடு மூலமே பொருளாதார சிக்கல் நீங்கும்!

நாட்டில் உருவெடுத்த பொருளாதார நெருக்கடியானது தற்போது அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்து விட்டது. கொவிட் பெருந்தொற்றினால் நாடு நீண்ட காலமாக முடங்கிக் கிடந்ததாலும், அந்நிய செலாவணி வருமானங்கள் தடைப்பட்டுப் போனதாலும் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் தற்போது சிக்கிக் கொண்டுள்ளது. அத்தியாவசியமான பாவனைப் பொருட்களின் விலைகள் அதிகரித்து விட்டதன் காரணமாக மக்கள் தாங்க முடியாத துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறான பொருளாதார நெருக்கடிகள் எப்போது தீருமென்று மக்கள் காத்துக் கொண்டிருக்கையில், அரசியல் நெருக்கடியும் உருவாகியுள்ளது. பொருளாதார நெருக்கடியும், அரசியல் நெருக்கடியும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவையாகும். பொருளாதார நெருக்கடியினால் அரசியல் நெருக்கடி தோன்றியது. அதேபோன்று அரசியல் நெருக்கடியினால் தற்போது பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையப் போகின்றது. இதுதான் நாட்டு மக்களில் சிந்திக்கத் தெரிந்த மக்களின் கவலையாக உள்ளது.

இவ்வாறான நிலையில்தான் மத்திய வங்கியின் ஆளுநரும் நேற்றுமுன்தினம் எச்சரிக்கை அறிவிப்பொன்றை பகிரங்கமாக வெளியிட்டுள்ளார். அவரது அறிவிப்பானது சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடியதொன்றல்ல. அந்த அறிவிப்பு நாட்டு நலன் கருதியதாகும். அதாவது எமது நாட்டின் எதிர்கால நலனுக்கான எச்சரிக்கை அறிவிப்பாகுமென்றே கொள்ள வேண்டியுள்ளது.

இன்றைய அரசியல் நெருக்கடிக்கு மிக விரைவில் தீர்வொன்று காணப்படுவது அவசியம். அப்போதுதான் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான முன்னகர்வுகளை மேற்கொள்ள முடியும். இல்லையேல் நாட்டின் பொருளாதார நெருக்கடியானது மென்மேலும் தீவிரமடைவதற்கே வாய்ப்புள்ளது என்பதே மத்திய வங்கி ஆளுநரின் எச்சரிக்கையாக உள்ளது. மத்திய வங்கி ஆளுநரின் அறிவிப்பில் அரசியல் கலப்பு எதுவுமே இல்லை. அவர் தலைசிறந்த பொருளாதார நிபுணர் ஆவார். நாட்டின் தற்போதைய யதார்த்த நிலைமை பற்றி அவர் ஒளிவுமறைவின்றி எடுத்துக் கூறியுள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிவிப்பானது தனியொரு தரப்பினருக்கானது மட்டுமல்ல. நாட்டின் அரசியல்வாதிகளுக்கு மாத்திரமன்றி அனைத்துத் தரப்பினருக்கும் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் மத்திய வங்கியின் ஆளுநர். அந்த அறிவிப்பை இவ்வாறும் நாம் எடுத்துக் கொள்ளலாம்.

'அரசியலைப் பற்றி மாத்திரம் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்காதீர்கள்! நாட்டைப் பற்றியும், நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றியும் பிரதானமாக சிந்தியுங்கள்' என்ற அர்த்தத்தில் நாம் அதனை எடுத்துக் கொள்ளலாம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியென்பது அலட்சியப்படுத்தக் கூடிய சாதாரணமான ஒன்றல்ல.

அது நாட்டை குட்டிச் சுவராக்கி விடக் கூடியது. எமது நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளிவிடக் கூடியது. மக்கள் மத்தியில் மோசமான உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தக் கூடியது.

எனவே எமது அரசியல்வாதிகள் எவ்வேளையிலும் அரசியலைப் பற்றி மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருக்கலாகாது. எமது மக்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனைதான் மிகவும் அவசியமானதாகும். ஏற்கனவே எமது நாடு மிக மோசமான பொருளாதார பின்னடைவுக்குச் சென்றிருக்கிறது. இவ்வேளையில் தொடர்ந்தும் அரசியல் நெருக்கடி நிலவுமானால் நாட்டில் ஏற்படப் போகின்ற பாதிப்பு மிக மோசமானதாகவே இருக்குமென்பதை அனைத்துத் தரப்பினரும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.


பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக எமது நாடு அதிகளவு கடனைப் பெற்றுக் கொண்டுள்ளதென்பதை மறந்து விடலாகாது. அக்கடன் தொகையெல்லாம் மீளச்செலுத்தப்பட வேண்டியவையாகும். எமது நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்காக அயல்நாடான இந்தியாவும் அதிக தொகை கடனை வழங்கியுள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதாயின் இதுவரை பெற்றுக் கொண்ட கடன் தொகை போதுமானதல்ல.

எமது நாடு இன்றைய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழுவதாயின் சர்வதேச நிதி நிறுவனங்களில் இருந்தெல்லாம் உதவிகளைப் பெற வேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கும் இலங்கை எதிர்பார்த்துள்ளது. அதேவேளை வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தால் மாத்திரமே எமது நாடு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்ள முடியும். அதன் மூலம் டொலர் பற்றாக்குறைக்கும் ஓரளவு தீர்வைக் காண முடியும்.

அந்நிய செலாவணி அதிகரிக்கப்பட வேண்டும். உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். அதிக பொருளாதாரம் ஈட்டப்பட வேண்டும். இவையெல்லாம் நடைபெற வேண்டுமானால் அரசியலில் ஸ்திரத்தன்மை ஏற்பட வேண்டும். அதுவே இன்று அவசியமானதாகும்.

editor.tkn@lakehouse.lk

# சிறுவர் இலக்கியம் மூலம் மக்கள் உள்ளத்தை கொள்ளை கொண்டவர் மாஸ்டர் சிவலிங்கம்



## மட்டக்களப்பின் மக்கள் மனம் கவர்ந்த சிவலிங்கம் மாமா மறைந்தார்!

மட்டக்களப்பில் மாத்திரமன்றி முழு இலங்கையிலும் சிறுவர் இலக்கியத்தின் அடையாளமாகத் திகழ்ந்த மாஸ்டர் சிவலிங்கத்தின் மறைவினால் அவரது அபிமானிகள், அன்பர்கள் மிகுந்த துயரத்துக்கு உள்ளாகியுள்ளனர். மாஸ்டர் சிவலிங்கம் என அன்பர்களால் அழைக்கப்படும் இரத்தினம் சிவலிங்கம் நேற்றுமுன்தினம் காலமானார்.

அவர் மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாயில் இரத்தினம்_ செல்லத்தங்கம் தம்பதிகளுக்கு மகனாக 1933 மார்ச் 28 இல் பிறந்தார். இவரது தந்தையார் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர் இலங்கையின் சிறுவர் இலக்கிய எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். கவிதை,சிறுவர் கதை, சிறுவர் பாடல்கள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைப் பேச்சு, நாடகம் எனப் பல துறைகளிலும் சிறப்புப் பெற்று இலக்கிய உலகில் பிரபல்யமாகத் திகழ்ந்தார். அவர் மட்டக்களப்பு, கல்லடி உப்போடையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். சிறுவர் கதை சொல்பவராக, வில்லிசைக் கலைஞராக, எழுத்தாளராக அவர் வலம் வந்தார்.

ஆறு பேர் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவதாகப் பிறந்தார் சிவலிங்கம்.சென் மேரிஸ் பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்றார். ஐம்பது ஆண்டுகளாக சிறுவர் கதைகள் சொல்லும் பணியையே அவர் கடமையாகச் செய்து வந்தார். மட்டக்களப்பு மாநகர சபையில் கதை சொல்லும் கலைஞனாக பணியாற்றியிருந்தார். சென்னை சந்தனு கலைக்கல்லூரியில் ஓராண்டு கார்ட்டூன் கலையும், வில்லிசைக் கலையும் பயின்றுள்ளார் மாஸ்டர் சிவலிங்கம்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை இவரைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று, இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்த சரவணமுத்து மாமாவிடம் அறிமுகம் செய்து வைத்தார். அன்று முதல் இலங்கை வானொலியில் கதை சொல்ல ஆரம்பித்தார். பின்னர் இலங்கைத் தொலைக்காட்சியிலும் இவரது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. கொழும்பில் இருந்து வெளியான தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் ஊடகவியலாளராகப் பணியாற்றினார்.

மாஸ்டர் சிவலிங்கம் பண்டிதர் பூபாலபிள்ளை என்பவரின் மகள் மங்கையர்க்கரசி என்பவரைத் திருமணம் புரிந்தார். அவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, உறைபனித் தாத்தா, சிறுவர் கதை மலர் என பல நூல்களை வெளியிட்டுள்ளார். சிறுவர் இலக்கியத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர் அவர்.

'அன்பு தந்த பரிசு' என்ற சிறுவர் இலக்கியத்துக்காக மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருதும் பரிசும் பெற்றிருந்தார்.

'நகைச்சுவைக் குமரன்' எனும் பட்டத்தை புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை வழங்கியிருந்தார். 'வில்லிசைச் செல்வன்' எனும் பட்டத்தை வித்துவான் பண்டிதமணி வி. சீ. கந்தையா வழங்கிருந்தார்.

'அருட்கலைத் திலகம்' எனும் பட்டத்தை கிருபானந்த வாரியார் வழங்கிருந்தார். 'வில்லிசைச் செல்வர்' எனும் பட்டத்தை முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை வழங்கிருந்தார். 'கலாபூஷணம்' விருதை கலாசார அமைச்சு இவருக்கு வழங்கியிருந்தது. 'கலைக்குரிசில்' விருதை மட்டு இந்து சமய அபிவிருத்தி சங்கம் வழங்கியது. 'சிறுவர் இலக்கியச் செம்மல்' விருதை கொழும்பு தமிழ்ச் சங்கம் வழங்கியது.

மட்டக்களப்பு மண்ணின் பொக்கிஷமாக கலைத்துறையில் பல்வேறு சாதனைகள் , புரிந்து உலகளவில் பிரசித்தி பெற்ற மிகப் பெரிய கலைஞர் அவர். குழந்தைகள் முதல் பெரியோர் வரை 'சிவலிங்கம் மாமா' என்றால் அறியாதோர் யாரும் இல்லை. தனது கலைத் திறமையின் மூலம் பல உள்ளங்களை கொள்ளை கொண்ட அன்பான பண்பான மனிதர் அவர்.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களில் சிறுவர் இலக்கியம் படைப்பவர்கள் மிகச் சிலரே என்ற நிலையில் மாஸ்டர் சிவலிங்கத்தின் இழப்பு இலங்கைத் தமிழ் இலக்கியத் துறைக்கு பேரிழப்பாகும். காலமாகும் போது இவருக்கு வயது 89. இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

**க.விஜயரெத்தினம்...**
*(வெல்லாவெளி தினகரன் நிருபர்)*

# ஆசிரியர் சேவையில் நாற்பது வருடங்களை பூர்த்தி செய்யும் திருமதி சாந்தி விஸ்வநாதன்



கண்டியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சாந்தி விஸ்வநாதன் தனது முதன்மைநிலைக் கல்வியை கண்டி அசோகா வித்தியாலயத்திலும், அதன் பின்னர் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் கற்றார். 1981ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பிரிவிற்கு தெரிவுசெய்யப்பட்டார். 1982 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் ஆசிரியர் நியமனத்திற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, மத்திய மாகாணத்தில் புசல்லாவை சி.சி தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார்.

அங்கு மூன்று ஆண்டுகள் கடமையாற்றியதன் பின்னர் இடமாற்றம் பெற்று 1985ஆம் ஆண்டிலிருந்து கண்டி ரஜவலை தமிழ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினார். 1986 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரை தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பக் கல்வித்துறையில் பயிற்சியை நிறைவு செய்ததன் பின்னர், 1988 ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவில் பயிற்றப்பட்ட ஆசிரியையாக நியமிக்கப்பட்டார்.

கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் இவரது வழிகாட்டலின் கீழ் பல மாணவர்கள் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி விருதுகளை பெற்றுள்ளார்கள். இவரின் கற்பித்தலின் மூலம் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 22 பேர் சித்தியடைந்து, நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தை கம்பளை கோட்டத்தில் முதலிடத்தையும் கண்டி மாவட்ட தமிழ் பாடசாலைகளில் மூன்றாம் இடத்தையும் அடையச் செய்த பெருமையும் இவரைச் சேரும்.

அதுமட்டுமன்றி இம்மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவன் செல்வன் அசோக் ராஜகோபாலன் ஜப்பான் நாட்டிற்கு செல்வதற்காக இலங்கை அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார். அந்த வகையில் முதலாவது மலையக மாணவனை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைத்த சிறப்பும் இவருக்குரியதாகும்.

இவர் பின்னர் பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் திறன்களையும், ஆற்றல்களையும் இனங்கண்டு தமிழ்த் தினப் போட்டிகள் போன்ற பல்வேறு போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபெறச் செய்து பரிசில்களை வென்றெடுக்கச் செய்தார். புலமைப்பரிசில் பரீட்சையிலும் வலய மற்றும் மாகாண மட்டத்தில் பல மாணவர்களை முதலிடம் பெறுவதற்கும் வழிகாட்டியுள்ளார். இணைப்புப் பாடமாக சிங்களப் பாடத்தை இடைநிலை மாணவர்களுக்கு கற்பித்து அவர்களையும் அப்பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி அடையச் செய்தார்.

2002 ஆம் ஆண்டில் கல்விமாணிப் பட்டத்தை பெற்றார். மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர்கள் நியமனத்திற்கான போட்டி பரீட்சையிலும் சித்தியடைந்து 2004ஆம் ஆண்டு கொழும்பு வலயத்தில் ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்றார். மேல்மாகாண கல்வித் திணைக்களத்தால் நிகழ்நிலை மூலமாக பயிற்சிகளை வழங்கிய செயற்திட்டத்தில் சிறந்ததோர் வளவாளராக பங்குபற்றினார்.

மேல்மாகாண கல்வித் திணைக்களத்தினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்ற 'தரம் 5 புலமைப்பரிசில் இலக்கு தவறாதிருக்க கரம் கொடுத்தல்' எனும் புத்தகத்தில் உள்ளடக்க வேண்டிய விடயங்களை மொழிபெயர்த்தும், செயலட்டைகள், வினாத்தாள்களை தயாரித்தும் பங்காற்றி வருகின்றார். உதவிப்பரீட்சகர், கட்டுப்பாட்டு விடைத்தாள் புள்ளியிடல் குழு உறுப்பினர், பிரதம பரீட்சகர் என பல பதவிகளையும் ஏற்று செயற்பட்டு வருகிறார். திருமதி சாந்தி விஸ்வநாதன் ஆசிரியை கல்விச் சேவையில் நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்வதையிட்டு பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**கே.சுப்பிரமணியம்...**
*முன்னாள் அதிபர்*
*க/கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம்*

# உலகின் உயர்மட்ட திரைப்படங்கள்; விமர்சகர் ஒருவரின் மனப்பதிவுகள்

(நேற்றைய தொடர்)

## எழுதுவது கே.எஸ்.சிவகுமாரன்



**நான் பார்த்த படங்கள்:**

2013ஆம் ஆண்டில் வெளியான பிலிப்பீனோ படம் Quick Change, எடு ஆர்டோ, டபிள்யூ ரோய்ஜ்ஜூனியர் என்பவர் நெறிப்படுத்தியது. உருவத்தில் பெண்ணும், ஜனனேந்திரியம் ஆணினதுமான விலைமாதர்கள், தமது ஏழ்மையைத் தாங்கிக் கொள்ளப் படும் பாட்டைச் சித்திரிக்கும் சமூகவியல் ரீதியான படம். கமரா கதை சொன்னது. வாய்ப் பேச்சுக்கள் சொற்பம். மறைமுகமாக இடம்பெற்ற அழகுபடுத்தும் நிறுவனங்கள் பின்னர் பொலிஸாரினால் அம்பலமாகி அத்தகைய பெண்களின் ஜீவனோபாயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

அடுத்த படம் SINK. தென்னாபிரிக்க நெறியாளர் பிரெட் மைக்கல் இனஸ் நெறிப்படுத்திய படம் கதை மனிதாபிமானத்தை வெளிப்படுத்தியது.

ஜோஹன்னாஸ்பேர்கில் வேலைக்காரியாக பணிபுரிந்த, மொசாம்பிக்கைச் சேர்ந்த ஒரு பெண்ணின் கதையில், வெவ்வேறு ஆபிரிக்க கலாசார இன்னலைக் காண முடிந்தது. ரேச்சல் என்ற அப்பெண்ணின் மகள் தென்னாபிரிக்க வீட்டுக்காரரின் வீட்டில் மரணிக்க நேர்கிறது. வீட்டுச் சொந்தக்காரரின் மனைவி தனது முதலாவது பிள்ளையைப் பெறக் காத்திருக்கிறாள். ரேச்சல் உதவி செய்ய முன்வருகிறாள். தனது சொந்த மகள் வீட்டுக்காரரின் கவனக்குறைவால் உயிரிழந்த போதும், ரேச்சல் தனது வறுமையை போக்க அங்கு தங்குகிறாள். இதுவும் ஒரு சமூகப் பிரச்சினையை சொல்லாமற் சொல்கிறது.

**கடல் ஆமை – சுனில் சுக்கன் ஆர்:**

சுமித்திரா, பாவே ஆகிய இருவரும் நெறிப்படுத்திய சுவாரஸ்யமான விவரணச் சித்திரம் சார்ந்த படம். கறுப்பு நிறக் கடல் ஆமை, கரைக்கு வந்து முட்டைகளை இட்டு விட்டு மீண்டும் கடலுக்குள் புகுந்து விடும். பின்னர் முட்டையில் இருந்து குஞ்சுகள் வெளியேறித் தாமே நீந்தி நீந்தி கடலுக்குச் சென்று விடும். இது சுற்றாடலும், இயற்கையும் துணைபுரிய தன்னிச்சையாகவே வளரும் இளம் ஆமைக் குஞ்சுகளின் கதை.

ஈரானியப் படமான LANTOURI வை ரேஸா டோர்மிசியான் நெறிப்படுத்தினார். ஒரு மறைவுலக மாந்தர் கூட்டம். வறியவர்களுக்கு உதவுவது என்ற பெயரில் டெஹரான் மாநகரத்திலுள்ள புதுப்பணக்கார இளைஞர்களிடமிருந்து கொள்ளை அடித்துத் தாமே சுகபோகம் அனுபவித்து வருகிறது. விரக்தியடையும் இளம் பராயத்தினர் வன்செயல்களிலும் சமூகவிரோத செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள். ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் போன்றோரைப் பேட்டி கண்டு இந்தச் சமூகப் பிரச்சினையை ஆராய்கிறது இப்படம்.

CLAIR OBSCURE என்ற படம் ஒரு கூட்டுத் தயாரிப்பு. துருக்கி, ஜேர்மனி, போலந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் சம்பந்தப்படுகின்றன. நெறியாளர் யெஸிம் உஸ்டாவோகுளு.

சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக தாம் வரித்துள்ள அரசியல் கோட்பாடுகளுக்கு இணங்க நம்மிடையே பல விவரணக்காரர்களும், விமர்சகர்களும் இருப்பதனால் அவர்களிடம் அந்தப் பணியை விட்டு விட்டு, அதிகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத உளவியல் சித்திரிப்புகள் கொண்ட படங்களையே நான் அதிகம் விரும்புவது. பாத்திரங்களின் அக உணர்வுகளைச் சொல்லாமற் சொல்லும் பாங்கு பல மேலைத்தேயப் படங்களில் அவதானிக்க முடிகிறது. அத்தகைய படம் ஒன்றே, தெளிவு/ தெளிவின்மை என்ற அர்த்தத்தைத் தரும் மேற்சொன்ன படமாகும்.

ஒருவித தடையை எதிர்நோக்கி வளர்ந்த இருவேறு இளம் பெண்களின் கட்டவிழ்ப்பே கதையின் ஓட்டம். சமூகத்தில் காணப்படும் அடக்குமுறைகளில் ஒன்று உளவியல் ரீதியான அடக்கு முறையாகும். இரு வெவ்வேறு இளம் பெண்கள் தமது இயல்பான உள வளர்ச்சியைப் பெறாவண்ணம் உலகறியாமற் வளர்க்கப்பட்டமையும் பின்னர் அவர்கள் அன்பு என்றால் என்ன? தாமும் காதலிக்க முடியும். ஏனையோருடன் உறவுகளை மேற்கொள்ள முடியும் என்பதைப் படிப்படியாக அவர்கள் உணர்கிறார்கள். இந்தப் படம் நான் பார்த்தவற்றுள் ரசிக்கத்தக்கதாய் இருந்தது.

அடுத்த படம் STRANGE EAVEN என்ற 2015 இல் வெளியான படம். போலந்தும், சுவீடனும் இணைந்து தயாரிக்கப்பட்டது. டேரியஸ் கஜேய்வ்கி நெறிப்படுத்தியிருந்தார். இந்தப் படமும் எனக்குப் பிடித்தது. இருவேறு நாடுகளின் கலாசாரம், சட்டதிட்டங்கள், குழந்தை வளர்ப்பில் பெற்றோர் உதாசீனம், சமூக நலன் கொண்டவர்களின் அக்கறை போன்றவை சம ரீதியாக விளங்கப்படுத்தப்படுகின்றன.

ஆயிரத்தில் ஒருவன் (2009) என்ற மலையாளப் படத்தையும் நான் ரசித்தேன். சி.பி.மலையில் நெறிப்படுத்தியது. யாவருக்கும் உதவும் பண்புள்ள ஒருவன் தன் தங்கையின் திருமணத்தைச் சிறப்பாக நடத்திய பின் ஓட்டாண்டியாகி, கடன் சுமையினால் படாதபாடு படுகிறான். கடன் கொடுத்தவர்கள் அவனை இம்சைக்கு உட்படுத்துகின்றனர். அவர்களுள் ஒருவர் மாத்திரம் விதிவிலக்கு. தனியாளாகிய அந்தப் பெரிய பணக்காரர் சாகு முன்னர், அவனின் கடன் யாவற்றையும் தீர்க்கும் வண்ணம் உதவுகிறார்.

**OSCURO ANIMAL**

ஸ்பானிய மொழியில் வெளியாகியது இந்தப் படம். ஆர்ஜென்டீனா, கொலம்பியா, கிறீஸ், நெதர்லாந்த் ஆகிய நாடுகளின் கூட்டுத் தயாரிப்பு இந்தப் படம். நெறியாளர் பெலிப்மே குரோரிரோ.

யுத்தம் நடைபெறும் காட்டுப் பிரதேசம். அங்கு வெவ்வேறு யுத்த முறைகள். கொலம்பியாவில் இராணுவத்தினருக்குத் துணைபோகும் போராளிகள் சிலர் அப்பிராந்திய மக்களை துன்புறுத்தி வருகின்றனர். இவர்களிடையே மூன்று பெண்கள் இக்கொலைக்காரர்களிடமிருந்து தப்பிச் செல்ல முயல்கின்றனர்.

இந்தக் குரூரச் சூழலில் மனித குணங்களை இழந்த மிருகமாக அவர்கள் மாறுகின்றனர். ஒருத்தி தனது மூர்க்கமான போராளியைக் கொன்று விட்டு தப்பியோடுகிறாள். இவ்வாறே மற்ற இரு பெண்களும் தப்பியோடுகின்றனர். இந்தப் படம் பெண் விடுதலையைக் கூறாமற் கூறுகிறது.

# இஸ்லாத்தின் பொருளாதார ஒழுங்கு

பொருளாதாரத்தின் முக்கியத்துவம் குறித்தும் அதன் அவசியம் தொடர்பிலும் அல்லாஹ்தஆலா தன் அருள் மறையாம் அல் குர்ஆனின் பல இடங்களில் எடுத்தியம்பியுள்ளான். பொருளாதாரம் குறித்த விபரங்களைத் தருகிற போது கூட அவன் அழகிய வார்த்தைகளைத் தான் பயன்படுத்தியுள்ளான். ஒரு இடத்தில் பொருளாதாரம் மனித வாழ்வின் 'ஸீனத்' என்றும் அலங்காரம் என்றும் கூறியுள்ள அவன், மற்றுமோர் இடத்தில் பொருளாதாரத்தை 'கைர்': நன்மை, 'ரஹ்மத்'; அருட்கொடை என்ற வார்த்தைகளைக் கொண்டும் விபரித்துள்ளான்.

அதேபோன்று வியாபாரம் செய்வதையும், பொருள் திரட்டுவதையும் திருக்குர்ஆன் பல இடங்களில் ஊக்குவித்திருப்பதை எம்மால் அவதானிக்க முடியும்.

குறிப்பாக ***'தொழுகையை நிறைவேற்றியதும் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள். அல்லாஹ்வை அதிகம் நினையுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்'***

***(அல் குர்ஆன் 62:10)***

என்று அவன் குறிப்பிட்டுள்ளான்.

மேலும், ***'நீங்கள் அமைதி பெறவும், அவனது அருளைத் தேடவும், நீங்கள் நன்றி செலுத்தவும் இரவு, பகலை ஏற்படுத்தியிருப்பது அவனது அருளில் உள்ளது' (அல் குர்ஆன் 28:73)***

என்றும் அவன் சுட்டிக்காட்டியுள்ளான்.

***'அவனது அருளைத் தேடவும், நீங்கள் நன்றி செலுத்திடவும் கடலை உங்களுக்கு அவனேபயன்படச் செய்தான். கப்பல்கள் அதைக் கிழித்துச் செல்வதை நீர் பார்க்கிறீர்' (அல் குர்ஆன் 16:14)***

எனவேதான் பொருளாதாரம் அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடை என்றும் அவ்வனைத்துப் பொருட்களையும், வளங்களையும் மக்களின் தேவைகளுக்காகவே அவன் படைத்திருக்கின்றான் என்பதனையும் எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

அந்த வகையில் தற்போது உலகின் சில நாடுகள் குறிப்பாக எமது தாய் நாடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. இதன் விளைவாகப் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. இது மக்களின் அன்றாட வாழ்க்கையில் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளன. இந்நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள அதேநேரம், இந்நெருக்கடிக்கு தீர்வு கோரிய ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறவே செய்கின்றன.

இன, மத பேதமின்றி நாட்டின் அனைத்து மக்களும் இந்நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள். இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல்கள் இன்றைய சூழலில் பெரிதும் பயன் மிக்கதாக அமையும். அவ்வழிகாட்டல்கள் நெருக்கடியான நிலையிருந்து மீட்சி பெறுவதற்கும் பொருளாதாரத்தில் வலிமை அடைந்திடவும் பெரிதும் உதவக் கூடியவையாகும்.

பொதுவாக உலகம் உள்ளிட்ட முழு பிரபஞ்சத்திலும் அனைத்து விடயங்களும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடந்து கொண்டிருக்கின்றன. இதனை அல் குர்ஆனும் ஹதீஸ்களும் மிகத் தெளிவாக எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. அதாவது, ***'ஒருபோதும் அல்லாஹ் விதித்ததைத் தவிர (வேறு ஒன்றும்) எங்களை அணுகாது அவன் தான் எங்களுடைய பாதுகாவலன்' என்று (நபியே!) நீர் கூறும். முஃமின்கள் அல்லாஹ்வின் மீதே பூரண நம்பிக்கை வைப்பார்களாக! (அல் குர்ஆன் 09:51).***

அதேநேரம் எமது சகல காரியங்களையும் அல்லாஹ்விடமே பாரம் சாட்ட வேண்டும். ***'(எவர், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு அவனை முற்றிலும் சார்ந்திருக்கிறாரோ, அவருக்கு அவன் போதுமானவன்.***

***(அல் குர்ஆன் 65:03)***

***65:03)*** என்றும் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

அதேநேரம், ***'நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள். நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன்' (அல் குர்ஆன் 71:10)*** என்றும், ***'(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான் (அல் குர்ஆன் 71:11)***

**மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வகையிலும் சந்தையில் செயற்கை தட்டுப்பாடுகளை ஏற்படுத்த துணை போகும் படியும் கொள்ளை இலாபமீட்டும் நோக்கிலும் பொருட்களை பதுக்கி வைக்கவோ விலைகளை அதிகரிக்கவோ மோசடியான முறையில் வியாபாரத்தை மேற்கொள்ளவோ இஸ்லாம் அணுகளவேனும் அனுமதி அளிக்கவில்லை.**

என்றும் ***'அன்றியும் அவன் உங்களுக்குப் பொருள்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான். இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான். உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான் (71:12)*** என்றும் அவன் குறிப்பிட்டிருக்கின்றான்.

ஆகவே ஒவ்வொரு முஃமினும் எல்லா நிலைமைகளிலும் அல்லாஹ்வை அஞ்சி நடப்பதும் அவனது கட்டளைகளைப் பின்பற்றி ஒழுகுவதும் அவன் தடுத்த விடயங்களிலிருந்து முற்றாக விலகி நடப்பதும் இன்றியமையாத விடயங்களாகும். அவற்றை தம் கடமையாகவும் பொறுப்பாகவும் கருதி செயற்படுவது அவசியம்.

மேலும் அல்லாஹ்தஆலா, ***'நிச்சயமாக அவ்வூர்வாசிகள் ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருந்தால் நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் பரகத்துகளை, பாக்கியங்களைத் திறந்து விட்டிருப்போம் (அல் குர்அன் 07:96)*** என்றும் ***'எவர் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கிறாரோ அவருக்கு (ஒவ்வொரு சங்கடத்திலிருந்தும்) வெளியேறும் வழியை அவன் ஆக்குவான்' (அல் குர்அன் 65:02)*** என்றும் ***'மேலும்,அவர்கள் எண்ணியிராத விதத்தில் அவருக்கு வாழ்வாதாரங்களை அவன் வழங்குவான் (அல் குர்ஆன்***

இவ்வாறு அல்குர்ஆன் மாத்திரமல்லாமல் நபிமொழிகளும் கூட பொருளாதாரம் தொடர்பில் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் பொருளாதாரத்தின் முக்கிய பிரிவினரில் ஒரு பகுதியினராக விளங்கும் வியாபாரிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வகையிலும் சந்தையில் செயற்கை தட்டுப்பாடுகளை ஏற்படுத்த துணை போகும் படியும் கொள்ளை இலாபமீட்டும் நோக்கிலும் பொருட்களை பதுக்கி வைக்கவோ விலைகளை அதிகரிக்கவோ மோசடியான முறையில் வியாபாரத்தை மேற்கொள்ளவோ இஸ்லாம் அணுகளவேனும் அனுமதி அளிக்கவில்லை. மக்கள் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுப்பதை தவிர்க்கும் வகையில் மேற்கொள்ளப்படும் வர்த்தக, வாணிப செயற்பாடுகளை இஸ்லாம் நன்மைகள் பெற்றுத்தரக்கூடிய தர்மங்களாகவே நோக்குகின்றது. இது தொடர்பிலும் தெளிவான வழிகாட்டல்கள் இஸ்லாத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

அதேநேரம் வீண் விரயத்தை முற்றாக வெறுத்திருக்கிறது இஸ்லாம். ***'உண்ணுங்கள், பருகுங்கள் எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை (அல் குர்ஆன் 07:31)*** என்ற வசனம் இதற்கு நல்ல சான்றாக உள்ளது.

***'நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள் நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான் (அல் குர்ஆன் 2:153).***

இந்த வசனத்தின் படி பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் பொறுமையுடனும் தொழுகையுடனும் தான் உதவி தேட வேண்டும். அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த வழிமுறைகளாக இவை விளங்குகின்றன. அத்தோடு பொருளாதார கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாகியுள்ளவர்களுக்கு வசதி படைத்தவர்கள் உதவி, ஒத்துழைப்பு நல்க வேண்டுமென வலியுறுத்தி ஊக்குவித்துள்ள இறைவழிகாட்டல் தான் இஸ்லாம்.

ஆகவே தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழலில் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய செயற்பட்டு மக்களது அசௌகரியங்களையும் சிரமங்களையும் தணிக்கவும் களையவும் முயற்சி செய்வோம். அவை அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்.

அஷ் ஷெய்க்
**ஏ.எச்.எம். மின்ஹாஜ்**
முப்தி (காஷிபி)

**ஆலமுல் இஸ்லாம்**

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# உளத்தூய்மையின் முக்கியத்துவம்

மறுமையின் வெற்றிக்கு உளத்தூய்மை மிகவும் அவசியமானது. இருந்தும் அந்த உளத்தூய்மை மக்கள் மத்தியில் தொடர்ந்தும் வீழச்சியடையும் நிலைமையை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக எந்தவொரு நற்காரியத்தை செய்தாலும் அடுத்தவர் தம்மைப் பாராட்ட வேண்டும், புகழ வேண்டும் என்ற உலக நோக்கத்தை மையமாகக் கொண்டு செயல்படும் நிலையை பரவலாக அவதானிக்க முடிகின்றது.

ஆனால் அல்லாஹ்தஆலா, 'வணக்கத்தை அல்லாஹ்வுக்கே கலப்பற்றதாக்கி வணங்குமாறும், உறுதியாக நிற்குமாறும், தொழுகையை நிலைநாட்டுமாறும், ஸகாத்தைக் கொடுக்குமாறும் தவிர அவர்களுக்கு வேறு கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. இதுவே நேரான மார்க்கம் (அல் குர்ஆன் 98:5) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவனிடம் மட்டுமே கூலியை எதிர்பார்த்துச் செய்ய வேண்டும். அவன் கட்டளையிட்டதால் தான் இதைச் செய்கிறோம் என்ற எண்ணமும் இருக்க வேண்டும் என்பதை மேற்கூறிய வசனம் தெளிவுபடுத்துகின்றது.

***'நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாது மக்களுக்குக் காட்டுவதற்காக தனது செல்வத்தைச் செலவிடுபவனைப் போல், உங்கள் தர்மங்களைச் சொல்லிக் காட்டியும், தொல்லை தந்தும் பாழாக்கி விடாதீர்கள்! இவனுக்கு உதாரணம் மேலே மண் படிந்திருக்கும் வழுக்குப் பாறை. அதன் மேல் மழை விழுந்ததும் மேலே ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுகிறது. தாம் பாடுபட்ட எதன் மீதும் அவர்கள் சக்தி பெற மாட்டார்கள். (தன்னை) மறுக்கும் கூட்டத்திற்கு அல்லாஹ் நேர் வழி காட்ட மாட்டான். (அல்குர்ஆன் 2:264)***

மறுமை நாளை நம்பாதவனே, தான் செய்யும் தர்மங்களைச் சொல்லிக் காட்டுவான், அதன் மூலம் தொந்தரவு செய்வான் என்ற திருக்குர்ஆன் வசனத்தின் மூலம் இறை நம்பிக்கையாளனின் நடவடிக்கை எப்படி அமைய வேண்டும் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான்.

இருந்தும் உதவி, ஒத்துழைப்புகள் போன்ற நற்காரியங்களைச் செய்துவிட்டு அதன் மூலம் உலக ஆதாயங்களை எதிர்பார்ப்பது இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. ஆனால் இவ்வாறு நடந்து கொள்பவர்கள் இறைவனின் கூற்றுப்படி, நன்மையை இழந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

எவ்வளவு பெரிய கஷ்டமான காரியங்களைச் செய்தாலும் அதில் உளத்தூய்மை இல்லாமல் போனால் அந்தக் கஷ்டத்திற்கு அல்லாஹ்விடம் மறுமை நாளில் எந்தப் பலனும் கிடைக்காமல் போய் விடும்.

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மிகப் பெரிய தியாகமாக இருந்த ஹிஜ்ரத் எனும் நாடு துறத்தல் சம்பவத்தைப் பற்றி அன்னார் குறிப்பிடும் போது, **அமல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்ததே! எவருடைய ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் அமையுமோ அது அல்லாஹ்வுக்காகவும், அவனது தூதருக்காகவும் செய்த ஹிஜ்ரத்தாக அமையும். எவருடைய ஹிஜ்ரத் உலக நோக்கத்தைக் கொண்டதாகவோ, அல்லது ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாகவோ இருந்தால் அவர் எதற்காக ஹிஜ்ரத் செய்தாரோ அதற்காகவே அமையும் என்றார்கள்.** (ஆதாரம்: புகாரி)

சொந்த நாட்டை விட்டு, குடும்பத்தை விட்டு நாடு துறந்து போனாலும் எண்ணம் சரியில்லை என்றால் அதற்கு மறுமையில் எந்தக் கூலியும் கிடைக்கப்பெறாது என்பதை இந்நபிமொழி தெளிவாக எடுத்தியம்புகிறது.

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், **'அல்லாஹ் உங்கள் உடல்களையோ, உங்கள் உருவங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, அவன் உங்கள் உள்ளத்தையும் அமல்களையும் மாத்திரமே பார்க்கிறான்' என்றுள்ளார்கள்.** (ஆதாரம்: முஸ்லிம்)

எனவே எமது அமல்களையும் நற்கருமங்களையும் இறைவனுக்காக மாத்திரம் அமைத்துக் கொள்வோம். அதன் ஊடாக மறுமையில் நிறைவான கூலியைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

**அப்துர் ரஹ்மான்...**

# அல்லாஹ்வின் நிழலை பெற்றுத்தரும் காரியம்

எல்லாம் வல்ல கண்ணியமிக்க அல்லாஹ் மனிதனைப் படைத்து, அவன் இவ் உலகில் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக செல்வம், பெற்றோர், உறவினர், மனைவி, மக்கள் என்ற எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கியுள்ளான். அவை மாத்திரமன்றி அவனுக்கு வரவிருக்கும் மற்றொரு வாழ்க்கையிலும் அவன் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக நன்மை தரும் பல காரியங்களைத் தனது தூதர் மூலம் வழிகாட்டியுள்ளான். அதில் ஒன்று தான் தர்மம். தனது தேவைக்கு மிஞ்சிய செல்வம் படைத்தவர்கள், தனக்குக் கீழுள்ள கஷ்டப்படும் ஏழைகளுக்குக் கொடுத்து அதன் மூலம் அவர்களது சிரமத்தை நீக்க வேண்டும்.

அல்லாஹ் நமக்குக் காட்டித் தந்துள்ள எத்தனையோ நற்காரியங்களுக்கு கணக்கின்றி எண்ணற்ற நன்மைகளை அவன் அள்ளிக் கொடுக்கக் கூடியவனாக உள்ளான். அது போன்று தர்மத்திற்கும் எண்ணற்ற பலன்கள் உண்டு. இப்பலனை அறியாத மக்கள் தர்மம் செய்வதை விட்டும் விலகி தூரமாகியுள்ளனர்.

ஆனால் நபி (ஸல்) அவர்கள், **'தேவை போக எஞ்சியதைத் தர்மம் செய்வதே சிறந்ததாகும். முதலில் உமது வீட்டாரிடமிருந்து ஆரம்பம் செய்யுங்கள்' என்று கூறினார்கள்.** (ஆதாரம்: புகாரி)

தேவைக்கு மேலதிகமாக உள்ளவற்றில் தர்மம் செய்ய வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ள இந்நபிமொழியை இன்றைய மக்களின் நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது நிலைமை மிகவும் கவலைக்குரியதாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். பொருளாதார வசதி படைத்தவர்களும் செல்வ செளிப்பு மிக்கவர்களும் வறுமையில் வாடுபவர்களுக்கு அவற்றில் செலவு செய்வதை விடவும் ஆடம்பரச் செலவுகளுக்காக வாரி இறைக்கின்றனர். ஆனால் இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல்களுக்கு முற்றிலும் இது முரணானது. பசியில் வாடுபவர்களைத் தேடிச்சென்று உதவுமாறு இஸ்லாம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், **'ஆதமின் மகனே! நீ மற்றவர்களுக்காகச் செலவிடு! நான் உனக்கு செலவிடுவேன்' என்று அல்லாஹ் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.** (ஆதாரம்: புகாரி)

இந்த நபிமொழியின் ஊடாக கூறப்படுகின்ற செய்தி, எம்மிடம் இருப்பதை நாம் மற்றவர்களுக்குக் கொடுத்தால் அல்லாஹ் நம் பசியை போக்குவான் என்பதாகும். இது எவ்வளவு பெரிய வாக்குறுதி! இதை விட வேறு என்ன தான் நமக்கு தேவை? அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானதும் உறுதியானதுமாகும்.

நாம் இந்த உலகில் நன்றாக வாழ தர்மம் வழிவகுப்பது போன்று எமது மறுமை வாழ்வு நன்றாக அமையவும் அது வழிவகுக்கும். மறுமை என்பது, மனிதர்களின் அழிச்சாட்டியங்கள் அடங்கி ஒடுங்கி பரிதாபத்துடன் நிற்கும் வாழ்க்கை! அவ்வாழ்க்கையின் கடுமைகளில் ஒன்று தான் வெப்பம், வியர்வை. மனிதன் இவ்வுலகில் செய்த பாவத்திற்கேற்ப அவன் வியர்வையில் மூழ்கும் நேரம் அது. இந்த நேரத்தில் அவன் எப்பேர்பட்ட அதிகாரம், செல்வம் படைத்தவனாக இருந்தாலும் எதுவும் செய்ய முடியாது. இந்நிலையில் அந்தக் கொடிய வெப்பத்தை விட்டும், வியர்வையை விட்டும் காப்பதற்கு தர்மம் கேடயமாக வந்து நிற்கும்.

இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் கூறும் போது,

***'அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்நாளில் அவன், தன் நிழலை ஏழு பேருக்கு அளிக்கிறான். அவர்களில் ஒருவர் தம்முடைய வலக்கரம் செய்யும் தர்மத்தை இடக்கரம் அறியாதவாறு இரகசியமாக தர்மம் செய்பவர்' என்று கூறினார்கள்.***

(ஆதாரம்: புகாரி)

இவற்றோடு தர்மத்திற்கான பிரதிபலன்கள் முடிவடைந்து விடுவதில்லை. மாறாக அதற்கான பிரதிபலன்களை அவன் வாரி வழங்கக்கூடியவனாக இருக்கின்றான்.

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், **'அல்லாஹ் மறுமை நாளில் உங்களில் ஒவ்வொருவருடனும் பேசாமல் இருப்பதில்லை. அப்போது அல்லாஹ்வுக்கும் உங்களுக்கும் இடையில் மொழி பெயர்ப்பாளர் எவரும் இருக்க மாட்டார். பிறகு அவர் கூர்ந்து பார்ப்பார். தமக்கு முன்புறம் எதையும் அவர் காண மாட்டார். பிறகு தமக்கு எதிரே பார்ப்பார். அப்போது அவரை (நரக) நெருப்பு தான் வரவேற்கும். ஆகவே முடிந்தால், பேரீச்சம் பழத்தின் சிறு துண்டையேனும் தர்மம் செய்து நரகத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்றார்கள்.**

(ஆதாரம்: புகாரி)

அல்லாஹ் நமக்குச் செய்யும் மிகப் பெரும் உதவிகளில் இதுவும் ஒன்று தான். நரகத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தான் நாம் அமல்கள் செய்ய வேண்டும். அந்நரகத்திலிருந்து எமக்கு பாதுகாப்பு அளிக்கும் கேடயமாக தர்மம் உள்ளது. **'ஒவ்வொரு நாளும் இரண்டு மலக்குகள் இறங்குகின்றனர். அவ்விருவரில் ஒருவர், 'அல்லாஹ்வே! தர்மம் செய்பவருக்குப் பிரதிபலனை அளித்திடுவாயாக!' என்று கூறுவார். இன்னொருவர், 'அல்லாஹ்வே! (தர்மம் செய்யாமல்) தடுத்து வைத்துக் கொள்பவர்களுக்கு அழிவை ஏற்படுத்துவாயாக!' என்று கூறுவார்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

(ஆதாரம்: புகாரி)

நாம் புரிகின்ற சாதாரண தர்மத்திற்கும் அல்லாஹ் மிகப் பெரும் கூலியாக சிறப்பான மறுமை வாழ்வைத் தருகின்றான். எனவே இதில் நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இவ்வுலகில் இறைவன் நமக்கு வழங்கிய பொருளாதாரத்தைப் பற்றி மறுமை நாளில் நிச்சயம் விசாரிப்பான். இதனை அல் குர்ஆன் **'அந்நாளில் அருட்கொடைகள் பற்றி விசாரிக்கப்படுவீர்கள். (102:08)** என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இவ்வசனத்தில் கூறப்படும் அருட்கொடை என்பது பொருட் செல்வம், மக்கட் செல்வம் என மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்துச் செல்வங்களையும் குறிக்கும். இச்செல்வங்கள் குறித்து இறைவன் மறுமையில் நிச்சயம் விசாரிப்பான்.

எனவே இந்த அற்ப உலகில் ஆடம்பரமாகச் செலவு செய்வதை விட்டு விட்டு, வறுமையிலும் பசியிலும் வாழக்கூடிய மக்களுக்கு அதிகமதிகம் தர்மம் செய்து மறுமையில் அல்லாஹ்வின் நிழலைப் பெற்றிடும் பாக்கியத்தை அடைந்திடுவோம்.

**அபூ முஷீரா...**




# இந்திய மீனவர்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருடகால சிறை

பரந்தன் குறுாப் நிருபர்)

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் மீதான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் பதினைந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருடகால சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, இரணைதீவு கடற்பரப்பில் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று (12/05/2022) கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.



இதன்போது 12 இந்திய மீனவர்கள் தொடர்பிலான குற்றச்சாட்டு பத்திரம் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதாவது அனுமதிப்பத்திரம் இன்றி இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசித்தமை, இழுவை மடிவலைகளை உடமையில் வைத்திருந்தமை, இழுவை மடி வலைகளை பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இதில் முதலாவது குற்றச்சாட்டுக்கு 15 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருடகால சிறை தண்டனையும் ஏனைய இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் படகு உரிமம் தொடர்பிலான விளக்கத்திற்கு தவணையிடப்பட்டுள்ளது.

# மருந்து தட்டுப்பாட்டினால் சிறைக்கைதிகள் பாதிப்பு

## குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவிப்பு

யாழ். விசேட நிருபர்

புதிய மகசின் சிறைச்சாலையில் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகவும் இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே முருகையா கோமகன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

பலவருட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிப்பை உணர ஆரம்பித்துள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மருந்து பெரும் தட்டுப்பாடாகவுள்ளது. மேலும் தற்போது சாதாரணமாக கிடைக்கும் பனடோலைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. அரசியல் கைதிகளின் உறவினர்கள் இதனை எமக்கு தெரியப்படுத்தி கவலைப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், அரசாங்க சர்வதேச தொண்டு நிறுவனங்கள்

கருத்திற்கொண்டு உதவி செய்ய முயற்சிக்க வேண்டும்.

அரசியல் கைதிகள் பலரும் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக இவ்வாறான நோய்களின் போது மருத்துவ ரீதியாக புறக்கணிக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகிறது. சம்பந்தப்பட்ட தரப்புகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். நாட்டை சூறையாடி பொருளாதாரத்தை நலிவடையச் செய்த நபர்கள் தப்பியோடக்கூடிய சூழலில் சாதாரண குற்றம் செய்ததற்காக 10 தொடக்கம் 26 வருடங்கள் வரை தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர். உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றார்.

# ஊரடங்கு சட்டம் தளர்வு; எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் கூட்டம்



(மன்னார் குறுாப் நிருபர்)



நாடளாவியரீதியில் நேற்று வியாழக்கிழமை( 12) காலை 7 மணியளவில் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டமையால் பெரும்பாலான மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வேறுபகுதிகளுக்கு செல்வதற்கு பஸ் நிலையங்களில் ஒன்றுகூடியமையை அவதானிக்கமுடிந்தது.

அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகள் 12 மணி வரை இயங்கியமையால் அதிகளவான மக்கள் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருந்தனர். பொது இடங்களில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் பிரசன்னம் குறைவாகவே காணப்பட்டது. மேலும் நேற்று வியாழக்கிழமை (12) மதியம் 2 மணி முதல் மீண்டும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டமையால் மக்கள் தேவையான பொருட்களை கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு

யாழ். விசேட , ஓமந்தை விஷேட,மன்னார் குறுாப் , மாங்குளம் குருப் நிருபர்

இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றிலிருந்து ஆரம்பமாகியது. அந்தவகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவு தூபிக்கு முன்பாக நேற்று காலை 10 மணியளவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கும் வீதியால் சென்றவர்களுக்கும் கஞ்சி வழங்கப்பட்டது.

அத்துடன் வீதியால் வருகை தந்த விசேட அதிரடிப்படையினரும் அங்கு நின்ற புலனாய்வாளர்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.












மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் நேற்று வியாழக்கிழமை(12) காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் மே18 முள்ளிவாய்க்கால் வாரத்தையொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சும் நடவடிக்கை இடம் பெற்றது.

அதனைத்தொடர்ந்து பள்ளிமுனை பங்குத்தந்தையின் மத பிரார்த்தனையை தொடர்ந்து அங்கு கூடி நின்றவர்களுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க உறுப்பினர்களினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

# மக்கள் நலனுக்காக இறுதிவரை போராடிய யாழ் மருத்துவபீட பேராசிரியர் பாலகுமார்

## அன்னார் காலமாகி இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தி

அண்மையில் இயற்கை எய்திய மருத்துவபீட உயிர் இரசாயனவியல் பேராசிரியர் பாலகுமார் சந்திரசேகரம்பிள்ளை 1959 ஆம் ஆண்டில் வடமராட்சியில் உள்ள நவிண்டில் கிராமத்தில் பெற்றோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். நண்பர்களினால் 'பாலா' என்று அன்பாக அழைக்கப்பட்ட இவருக்கு ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் இருக்கிறார்கள்.

எட்டாம் வகுப்பில் இருந்து தனது கல்வியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தொடர்ந்த இவர், என்னை முதன்முதல் சந்தித்த போது மிகவும் எளிமையாக, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உயிரியல் ஆசிரியராகக் கடமையாற்றிய என்னுடைய தந்தையார் கணபதிப்பிள்ளை வல்லிபுரநாதனின் மாணவன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். நான் மருத்துவப் பட்டதாரியாக யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறி பல வருடங்களின் பின்னரேயே அவர் மருத்துவபீடத்தில் இணைந்து கொண்டதால் அவரைப் பற்றி ஆரம்ப காலத்தில் அறியும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை; ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும் என்று திருவள்ளுவர் கூறியது போல் இவரது நட்பு எனக்கு எதிர்பாராதவிதமாக 2015 ஆம் ஆண்டு கிடைத்தது. அந்த நேரத்தில் வலிகாமத்தைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் சுன்னாகம் தனியார் மின் பிறப்பாக்கியில் இருந்து வெளிப்பட்ட ஒயில் கழிவுகள் குடிநீரில் கலந்தமையால் பாதிக்கப்பட்டு இருந்தனர். இந்த மாபெரும் சுற்றுச்சூழல் அழிவுக்கு எதிராக யாழ் மருத்துவ சங்கத்தின் தலைவராகவும் சமுதாய மருத்துவ நிபுணராகவும் நான் சில சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆதரவுடன் போராட வேண்டியிருந்தது.

இத்தகைய இக்கட்டான நேரத்தில் அப்போது மருத்துவ பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் பாலகுமார் மருத்துவபீட ஆய்வுகூடங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டு வலிகாமம் குடிநீரில் ஒயில் கலந்து இருக்கும் உண்மை நிலையை உறுதி செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து என்னுடன் தொடர்பை ஏற்படுத்தி மக்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநியாயத்துக்கு எதிராக



தோளோடு தோள் நின்று போராட முன்வந்தார். பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையிட்டு கவலை அடைந்திருந்த பேராசிரியர் பாலகுமார், அதில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக ஒரு நீர் சுத்திகரிப்பு வடிகட்டி ஒன்றை அமைக்கும் ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார்.

அவருடைய அந்த ஆய்வு முயற்சி முழுமையாக வெற்றி அளிக்காத போதிலும் அரசியல்வாதிகள், பேராசிரியர்கள், மருத்துவர்கள் என்று ஒரு பெரிய கும்பல் பல்தேசிய கம்பனியினால் வாங்கப்பட்டு அதை ஆதரிக்கும் நிலையில், நேர்மையாக ஒருவருக்கும் பயப்படாமல் எம்முடன் இணைந்து போராடியது மிகவும் போற்றத்தக்கது. இறுதியாக உச்ச நீதிமன்றத்தில் நீர் மாசடைதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் தீர்ப்பு வழங்கப்பட்டதிலும் பேராசிரியர் பாலகுமாரின் பங்களிப்பும் இருந்தது.

வழமையாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் மூன்று முக்கிய பணிகளில் ஈடுபடுவார்கள்: 1. மாணவர்களுக்கு கற்பித்தல் 2. ஆய்வுகளை மேற்கொள்ளுதல் 3. பல்கலைக்கழக நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளுதல். பேராசிரியர் பாலகுமார் இவை மூன்றிலும் சிறந்து விளங்கினார். முதலாவதாக மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பிப்பது மாத்திரமல்லாமல் உரிய ஆலோசனைகளையும் வழங்கி அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமானவராக இருந்தார். இரண்டாவதாக பல ஆய்வுகளை மேற்கொண்டு PhD கலாநிதி பட்டம் பெற்றுக் கொண்டதுமல்லாமல், பேராசிரியராக பதவி உயர்வு பெற்று இருந்தார். மூன்றாவதாக பல்கலைக்கழக நிர்வாகத்தில் உயிர் இரசாயனவியல் துறை தலைவராக இருந்தது மாத்திரமல்லாமல் அரசியல் தலையீடு அற்ற உச்சநிலையாகிய மருத்துவ பீடாதிபதியாக செயல்பட்டிருந்தார். ஆனால் அவர் உபவேந்தராக வருவதற்கு முயற்சி செய்யவில்லை.


இவை எல்லாவற்றுக்கும் மேலாக சமூகப் பொறுப்புடன் பொதுமக்களின் நலனில் தீவிர அக்கறை கொண்டிருந்தார். அவர் அதீத நேர்மையாளராக இருந்ததுடன் புலம் பெயர் சமூகத்தின் நிதி உதவிகள் பாதிப்புற்ற மக்களுக்கு முறையான விதத்தில் பயன்படுகின்றன என்பதை பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவர் வகித்த பதவிகளில் உறுதி செய்திருந்தார்.

மக்களுக்காக உறுதியாக போராடிய மாமனிதர், இளமைத் தோற்றத்துடன் கூடிய பேராசிரியர் பாலகுமார் 13.04.2022 அவருடைய 63 வயதில் திடீரென்று காலமான செய்தியை எவராலும் நம்ப முடியாமல் இருந்தது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கொள்கையுடையவர் அவர். சைவக் கோயில்கள் பலவற்றில் நிர்வாக சபைகளில் கடமையாற்றியவர் அவர். அன்னாரின் வெற்றிடம் என்றுமே நிரப்ப முடியாததாகும்.



மருத்துவ கலாநிதி
முரளி வல்லிபுரநாதன்
சமுதாய மருத்துவ நிபுணர்,
சுகாதார அமைச்சு
(யாழ் மருத்துவச் சங்கத் தலைவர்)

## மலைச்சாரல்



# மலையகத்தில் நிலைமைகள் வழமைக்கு திரும்பியது





**ஹற்றன் சுழற்சி நிருபர்**

ஊரடங்கு சட்டம் நேற்று காலை 7 மணிமுதல் தளர்த்தப்பட்டதை அடுத்து மலையகத்தில் நிலைமைகள் வழமைக்கு திரும்பியது.

சந்தைகள், பல்பொருள் அங்காடிகள், கடை தொகுதிகள் என்பன திறக்கப்பட்டு இருப்பதையும் பொதுமக்கள் பொருட்கள் கொள்வனவில் மும்முரமாக ஈடுபடுவதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

சில இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபட்டிருந்தது.

பாடசாலைகள் மூடப்பட்டு இருப்பதையும், அரச திணைக்களங்கள் திறந்திருந்துள்ளதுடன் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் இடம்பெறுவதையும் அவதானிக்க முடிந்தது.

மேலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருப்பதையும் நகரங்களின் பிரதான சந்திகளில் வீதிமறியல் போடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

## யாத்திரை வந்த மக்கள் பாதுகாப்பாக அனுப்பி வைப்பு



**தலவாக்கலை குறூப் நிருபர்**

ஹற்றன் ஊடாக சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்ற யாத்திரிகர்கள் நாட்டில் திடீரென அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவால் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் பாரிய அசௌகரியங்களுக்குள்ளாகினர். இந்நிலையில் ஹற்றன் புகையிரத நிலையம், நல்லத்தண்ணி ஆகிய இடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த இவர்கள் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் ஊடாக சொந்த இடங்களுக்கு நேற்று முன்தினம் (11) அனுப்பி வைக்கப்பட்டனர். அக்குரஸ்ஸ, களுத்துறை, மீபே, கொழும்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து வருகைத் தந்திருந்த யாத்திரிகர்களே இவ்வாறு அனுப்பப்பட்டனர். நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொடவின் ஆலோசனைக்கமைய ஊரடங்கு உத்தரவின்போது பயணிக்கும் அனுமதிப்பத்திரத்துடன் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.







மடுல்சீமை பிரதேசத்தில் SeeMaa குழுவினரால் பொருளாதார ரீதியாக மிகவும் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாச கொப்பிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. படம்: லுணுகல நிருபர்

## ஜே.வி.பி தலைவரின் குற்றச்சாட்டை கண்டிக்கிறேன்

### டிலான் பெரேரா எம்.பி

**ஹாலிஎல விசேட நிருபர்**

எனது அரசியல் வரலாற்றில் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா சமூக வலைத்தளங்களில் ஒரு குறிப்பை இட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களான அனுரகுமார திசாநாயக்க மற்றும் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர், பெருமளவிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் பண மோசடியை அம்பலப்படுத்தினர். இதன்போது, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் பெயரும் வெளியிடப்பட்டிருந்தது.

இதற்கு அவர் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

28 ஆண்டுகளாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தவர். வணிகவியல் மற்றும் பார் தேர்வில் சிறப்புப் பட்டம் பெற்றவர், இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவான என்னை போன்ற அரசியல்வாதிக்கு, மே தினக் கூட்டத்திற்கு உணவு கொண்டுவந்து போலியான உண்டியல் ரசீதுகளைப் பெற்றதாக ஜே.வி.பி தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

28 வருடங்களில் நான் கேள்விப்பட்ட மிகப் பெரிய முட்டாள்தனம் என்று கூறலாம்.

காலியில் மே தினக் கூட்டத்திற்கு எல்லவில் உள்ள கடையொன்றில் இருந்து உணவுப் பொட்டலங்களை எடுத்துச் சென்றமைக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த பொய்யான குற்றச்சாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதை எனது சட்ட ஆலோசகர்களிடம் விட்டுவிடுகிறேன்.

தேசிய அரசாங்கமே பொருத்தமானது என சமகி ஜன பலவேக உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்தை நான் பாராட்டுகின்றேன். சமகி ஜன பலவேகவில் இணையுமாறு பரிந்துரைத்திருந்தார். நான் ஒருபோதும் முதலாளித்துவ முகாமில் இருக்க மாட்டேன்.

தேர்தலுக்குத் தள்ள முற்படும் நாடு தேர்தலுக்குத் தயாராகாத நிலையில், அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு காபந்து அரசாங்கத்தை அமைக்குமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

## கொவிட் தொற்றினால் ஷங்காய் முழுஅடைப்பு

### ஐந்து இலட்சம் பேர் கண்காணிப்பு முகாம்களில்



ஷங்காய் நகரில் கொவிட் 19 தொற்று வேகமாக பரவி வருவதையடுத்து சீன அரசு அடக்கு முறைக்கு நிகரான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஷங்காய் நகரில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளனரா என்பதைக் கண்டு பிடிப்பதற்கான பரிசோதனைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் முதல் நகர் முழுமையாக மூடப்பட்டு 25 மில்லியன் மக்கள் வெளியுலகத் தொடர்பின்றி வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டோர் மருத்துவ கண்காணிப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஷங்காய் நகரில் காணப்படும் இந் நிலைமைகளை அடக்கு முறைகளுக்கு உட்பட்டிருக்கும் ஸின் ஜியாங் மாகாண சிறுபான்மை உய்கர் முஸ்லிம் மக்களின் அடக்குமுறை நிலைமைகளுடன் ஒப்பிட்டிருக்கும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை, வரிசைகளில் நின்று தாம் தீவிரவாதத்துடன் தொடர் உடையவர்கள் அல்ல என்பதை உய்கர் சமூகத்தினர் உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்துடன் ஷங்காய் மக்களை இணைத்துக் கூறியுள்ளது. இவ்வாறு ஐந்து லட்சம் ஷங்காய் மக்கள் மருத்துவ கண்காணிப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

வூஹான் முழு அடைப்பு தொடர்பாக நூல் எழுதியுள்ள முரோங் ஷூயிகுன், கொவிட் பெருந்தொற்றானது சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு தன் அதிகாரத்தை மூலை முடுக்கெல்லாம் நிலை நிறுத்துவதற்கு உதவியிருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார். யார் யாரையெல்லாம் சுற்றிவளைக்க வேண்டுமோ அவர்கள் அனைவருமே சுற்றிவளைக்கப்பட வேண்டும் என்பது ஸின்ஜியாங் சுலோகமென்றால் யார் யாரையெல்லாம் பிடிக்குள் கொண்டுவர வேண்டுமோ அவர்கள் அனைவரும் பிடிக்குள் கொண்டுவர வேண்டும் என்பது ஷங்காய் வாசகமாக இருக்கிறது என்று விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.


# பிம்புத் பினான்ஸ் பிஎல்சி

BIMPUTH Strength of the Sri Lankan Economy

## 2022 மார்ச் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று

### வருமானக்கூற்று

ரூபா. '000

| | 31.03.2022 (கணக்காய்வுக்குட்படாதது) | 31.03.2021 (கணக்காய்வுக்குட்படாதது) |
|---|---|---|
| வட்டி வருமானம் | 248,861 | 718,188 |
| வட்டிச் செலவினங்கள் | (452,664) | (766,297) |
| **தேறிய வட்டி வருமானம்** | **(203,803)** | **(48,109)** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 7,033 | 15,713 |
| கட்டணம் மற்றும் தரகு செலவீனம் | | |
| **தேறிய கட்டண வருமானம்** | **7,033** | **15,713** |
| வியாபாரத்திலிருந்து தேறிய இலாம் / (இழப்பு) | - | - |
| FVTPL விற்பனை சாதனங்களின் தேறிய இலாம் / (இழப்பு) | 216,044 | (33,560) |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 83,058 | 143,376 |
| முதலீட்டுச் சொத்துக்களின் நியாயமான மதிப்பில் மாற்றம் | - | 201,912 |
| **ஏனைய தொழிற்பாட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய இலாபம்/(இழப்பு)** | **299,101** | **311,729** |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **102,332** | **279,332** |
| தனிப்பட்ட பெறுமானகுறைப்பு | 249,057 | 38,255 |
| திரண்ட பெறுமானகுறைப்பு | - | - |
| ஏனையவை | - | - |
| **கடன் மற்றும் ஏனைய இழப்புக்களில் பெறுமானகுறைப்பு** | **249,057** | **38,255** |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **(146,725)** | **241,078** |
| பணியாளர் செலவினங்கள் | 131,194 | 171,634 |
| தேய்மானம் | 286,480 | 357,622 |
| ஏனைய செலவீனங்கள் | 27,888 | 83,829 |
| **தொழிற்பாட்டு செலவினங்கள்** | **445,562** | **613,085** |
| **FSVAT முன் தொழிற்பாட்டு இலாம் / (இழப்பு)** | **(592,287)** | **(372,007)** |
| நிதிச் சேவைகள் மீது வரி | (2,377) | (9,626) |
| **FSVAT பின் தொழிற்பாட்டு இலாம் / (இழப்பு)** | **(594,664)** | **(381,633)** |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **(594,664)** | **(381,633)** |
| வருமான வரி செலவீனம் | - | - |
| **காலத்திற்கான இலாபம்/நட்டம்** | **(594,664)** | **(381,633)** |
| **ஏனைய விரிவான இலாபம், தேறிய வருமா வரி** | | |
| துணை நிறுவனங்களின் ஏனைய விரிவான வருமானத்தின் பங்கு | - | - |
| வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்களில் உண்மையான ஆதாயம் | - | (366) |
| மறுமதிப்பீட்டு உபரியில் மாற்றங்கள் | - | 28,171 |
| **காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | **(594,664)** | **(353,828)** |
| **பங்கு ஒன்றிற்கான இலாபம்** | **(5.52)** | **(3.54)** |
| **மூலதன போதுமை** | | |
| அடிப்படை மூலதனம் ரூ. 000 | -333,193 | -333,193 |
| மொத்த மூலதன அடித்தளம் ரூ. 000 | -333,193 | -333,193 |
| அடிப்படை மூலதனம்-இடர் நிறையேற்றிய சொத்துக்கள் விகிதம் (குறைந்தபட்சம் 8.5%) | -6.59% | -6.08% |
| மொத்த மூலதனம்-இடர் நிறையேற்றிய சொத்துக்கள் விகிதம் (குறைந்தபட்சம் 12.5%) | -6.59% | -6.08% |
| மூலதன நிதி-மொத்த வைப்பு பொறுப்புகள் விகிதம் (குறைந்தபட்ச தேவை, 10%) | -19.76% | 31.17% |
| **சொத்துக்களின் தரம்** | | |
| மொத்த செயற்படாத ஒதுக்கீடுகள் ரூ. "000 | 1,719,091 | 1,379,217 |
| மொத்த செயற்படாத ஒதுக்கீடுகள் விகிதம் % | 45.11% | 31.84% |
| தேறிய செயற்படுத்தப்படாத வசதிகளுடன் விகிதம் % | 0.67% | -0.70% |
| **இலாபத்தன்மை (%)** | | |
| வட்டி எல்லை (தேறிய வட்டி இலாபம்/மொத்தச் சொத்து) | -4.11% | -0.81% |
| சொத்துக்கள் மீதான திரும்பல்கள் (வரிக்கு முன்னர்) | -11.99% | -6.41% |
| பங்குகள் மீதான திரும்பல்கள் (வரிக்கு பின்னர்) | 289.67% | -98.01% |
| **திரவத்தன்மை (ரூபா. 000)** | | |
| திரவச் சொத்துக்களின் ஆகக்குறைந்த தேவைப்பாடு | 194,099 | 219,927 |
| திரவச் சொத்துக்களின் கிடைபெறுமானம் | 385,858 | 421,280 |
| அரச பத்திரங்களின் ஆகக்குறைந்த தேவைப்பாடு | 206,310 | 159,785 |
| அரச பத்திரங்களின் கிடைப்பனவு | 92,308 | 132,688 |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 270 | 331 |
| கிளைகளின் எண்ணிக்கை | 18 | 19 |
| சேவை மையங்களின் எண்ணிக்கை | 28 | 28 |

### நிதி நிலைமை அறிக்கை

ரூபா. '000

| | 31.03.2022 (கணக்காய்வுக்குட்படாதது) | 31.03.2021 (கணக்காய்வுக்குட்படாதது) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 80,893 | 275,476 |
| நிதியியல் சாதனங்கள் இருப்பு | 383,473 | 130,606 |
| நிதி முதலீடுகள் - நியாய மதிப்பீனூடக இலாப நட்டம் | 6,724 | 106,108 |
| நிலைமாறக்கூடிய செலவில் கடன் பத்திரங்களில் | 119,308 | 132,689 |
| நிதிச் சொத்துக்கள் - விற்பனைக்குள்ளவை | 194 | 194 |
| கடன் மற்றும் பெறுகைகள் - குத்தகை | 499,568 | 570,625 |
| கடன் மற்றும் பெறுகைகள் - வாடகை | - | - |
| கடன் மற்றும் பெறுகைகள் - ஏனையவை | 1,617,772 | 2,351,988 |
| பெறக்கூடிய வரி | 110,571 | 110,630 |
| ஏனைய பெறுகைகள் | 96,308 | 126,167 |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | 219,111 | 288,275 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 1,770,196 | 1,769,396 |
| பயன்பாட்டு சொத்துக்கள் | 43,047 | 69,850 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 12,326 | 17,789 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | **4,959,491** | **5,949,794** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிக் கடன்கள் | 3,948,272 | 4,114,648 |
| வாடிக்கையாளர் கடன்கள் | 1,038,776 | 1,248,991 |
| ஏனைய செலுத்த வேண்டியவை | 77,736 | 73,332 |
| குத்தகை பொறுப்பு | 70,417 | 89,727 |
| ஓய்வு நலக் கடப்பாடுகள் | 29,584 | 33,724 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புகள் | - | - |
| | **5,164,784** | **5,560,423** |
| **பங்குதாரர் நிதி** | | |
| பிரேரிக்கப்பட்ட மூலதனம் | 616,100 | 616,100 |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | 51,391 | 51,391 |
| சட்டவொதுக்க நிதியம் | 71,842 | 71,842 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | (944,626) | (349,962) |
| | (205,293) | 389,371 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **4,959,491** | **5,949,794** |
| **பங்கொன்றின் தேறிய சொத்து** | **(1.91)** | **3.61** |
| **தொடர்ச்சியான பொறுப்பு மற்றும் கடமைகள், ரூ. "000"** | **0** | **0** |

2011ஆம் ஆண்டின 42ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் கிழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் சான்றிதழ் அளிக்கப்பட்டது. (சான்றிதழ் இல. RFC/033) கூட்டிணைக்கப்பட்ட திகதி 27.07.2007 பிட்ச் ரேட்டிங் லங்காவின் நிரலிடப்பட்டது. "CC(lka) watch negative" அக்டோபர் 15, 2021 முதல் 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க - குறைந்தபட்ச கோர் மூலதனத்தின் படி நிறுவனம் தேவையான முக்கிய மூலதனத்தை பூர்த்தி செய்யும் வரை இலங்கை மத்திய வங்கியால் புதிய வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்வதற்கு எதிராக தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. பங்குகளின் வர்த்தகம் 07 ஜனவரி 2022 அன்று CSE ஆல் நிறுத்தப்பட்டது.

இங்கே கீழ் ஒப்பமிட்டுள்ள பிம்புத் பினான்ஸ் பிஎல்சி யின் பணிப்பாளர் மற்றும் தலைமை நிதி அதிகாரி (செயல்) ஆகிய நாம் இணைவாக சான்றுப்படுத்துவது யாதெனில்

(அ) மேலுள்ள கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட் பரிமாணத்துக்கும் வரையரைக்கும் அமைய தயாரிக்கப்பட்டது.

(ஆ) இக்கூற்றுக்களில் உள்ள தகவல்கள், கம்பனியின் கணக்காய்வு செய்யப்படாத கணக்கு அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையாகும் அவை கணக்காய்வு செய்தவை என குறிக்கப்படாவிடின்

பணிப்பாளர்
P.M.K. கமகே

தலைமை நிதி அதிகாரி (செயல்)
P.D.C.R. விஜயரத்தன

# நாட்டை மீண்டும் வழமைக்கு கொண்டுவருவார் பிரதமர் ரணில்!

## ஐ.தே.க. ஆனந்தகுமார் வாழ்த்து



இலங்கையின் 26ஆவது பிரதமராக பதவியேற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது,

எமது நாடு மிகவும் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பயணத்துக்கொண்டிருக்கிறது. பொருளாதார ரீதியாக அனைத்து மட்டங்களிலும் நெருக்கடிகளும் சவால்களும் உச்சம் தொட்டுள்ளன. நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண பலம்வாய்ந்த மற்றும் சர்வதேச ரீதியாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தலைவர் ஒருவர் அவசியமாகும். இன்றைய சூழலில் அதற்கு பொருத்தமான நபராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார் என்பதை பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இலங்கையின் பிரதமராக 5 தடவைகள் அவர் பதவி வகித்துள்ளார். இவர் பிரதமராக பதவி வகித்த காலப்பகுதிகள் அனைத்தும் மிகவும் சவால்மிக்க காலப் பகுதிகளாகும்.

மீண்டும் இக்கட்டான ஒரு சூழலில்தான் 6ஆவது தடவையாக அவர் பிரதமராக பொறுப்பேற்றுள்ளார். இந்த சவால்களையும் வெற்றிக்கொண்டு நாட்டை வழமைக்கு கொண்டுவருவார். மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமைகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் குறைக்கும் ஆளுமை அவரிடம் உள்ளது. இத்தருணத்தில் அவருக்குத் தேவையான பலத்தை மாத்திரமே மக்கள் வழங்க வேண்டியுள்ளது. குறிப்பாக மலையக அரசியல்வாதிகள் கட்சி பேதங்களை கடந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றி எமது மக்களுக்கான நன்மைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## இலங்கை மக்களுக்கு...

மு.க.ஸ்டாலினிடம் நேற்று வழங்கினார்

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு தமிழக அரசு சார்பில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதிமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் சார்பிலும் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றது.

திமுக சார்பில் இலங்கை மக்களுக்கு ரூ. 1 கோடி (இந்திய ரூபாய்) நிதியுதவி அளிக்கப்பட்ட நிலையில் திமுக எம்எல்ஏக்கள், எம்.பி.க்கள் சார்பிலும் ஒரு மாத ஊதியம் முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், திமுக எம்.எல்.ஏ.க்களின் ஒரு மாத ஊதியமான ரூ. 1 கோடியே 30 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார். நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் உடனிருந்தனர்.

## அரசின் எந்தவொரு...

பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது அமைதிப் போராட்டம் நடத்துபவர்களுடன் எந்தவித நிபந்தையுமில்லாமல் தமது ஆதரவை வழங்க தயாராகவுள்ளதாக போராட்டக்காரர்களுடனான பேச்சுவார்த்தை தவிர்ந்த ராஜபக்ஷக்களின் நெருக்கடி நிலையை நிவர்த்திசெய்வதற்கு பங்காளியாக செயற்பட தாம் ஒருபோதும் தயாரில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமது அரசியல் நிலைப்பாடு தொடர்பில் தற்போது பரப்பப்பட்டுவரும் வதந்திகள் மற்றும் விமர்சனங்களை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் அவர் தமது டுவிட்டர் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## ரணிலின் அமைச்சரவையில்...

புதிய பிரதமராக விக்கிரமசிங்க பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையை ரணில் விக்ரமசிங்க உருவாக்குவார் என்று ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். ஏற்கனவே நான்கு நிபந்தனைகளின் அடிப்படையில் புதிய அமைச்சரவையை அமைப்பதற்கு உடன்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும், புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அவர் இணங்க வேண்டும். நாட்டின் நிலைமை ஸ்திரமானவுடன் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதே நிபந்தனைகளாகும்.

## மல்வானை காணி விவகார...

16 ஏக்கர் காணியை கொள்வனவு செய்தமை, பிரமாண்டமான வீடு மற்றும் நீச்சல் தடாகம் ஒன்றை நிர்மாணித்தமை, பண்ணை ஒன்றை நடத்தியமை மற்றும் அரச நிதியை முறைக்கேடாக பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 25ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பசில் ராஜபக்ச மற்றும் திருக்குமரன் நடேசனுக்கு எதிராக நிதிக் குற்றப் புலனாய்வு ப் பிரிவில் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை எனவும், தமது வாக்குமூலத்தில் கையொப்பம் இடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அரச தரப்பினால் அழைக்கப்பட்ட முதலாவது சாட்சியாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மேற்படி இருவருக்கு எதிராக சாட்சிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஷனில் குலரத்ன அதன்போது மேல் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

## 17 பேருக்கு வெளிநாடு...

வெளிநாட்டுப் பயணத்தடை விதித்துள்ளது. கடந்த 9ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றபோது கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ,முன்னாள் அமைச்சர்கள் நாமல் ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாரச்சி, காஞ்சன ஜயரத்ன, ரோஹித்த அபேகுணவர்தன, சி.பி. ரத்னாயக்க, சனத் நிசாந்த மற்றும் சஞ்சீவ எதிரிமான்ன, சம்பத் அத்துகோரள,ரேணுக பெரேரா, மஹிந்த கஹந்தகம,சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் உள்ளிட்ட 17 பேருக்கே கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் இந்த வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் சார்பில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அயேஷா ஜினசேன விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு மாஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதேவேளை மேற்படி சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சிகள் 7 பேருடைய வெளிநாட்டுப் பயணங்களைத் தடை செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அவர்களது வெளிநாட்டுப் பயணங்களை தடை செய்யுமாறு குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும் அவர்களது கடவுச்சீட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் நீதவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார்.(ஸ)

## இரண்டு அதிகாரத்தையும்...

ஆகியவற்றை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதிகாரிகள் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி கோட்டா கோ கம போன்ற பகுதிகளில் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான கருத்தினை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை நசுக்கும் நடவடிக்கைளில் ஈடுபடக்கூடாது எனவும் மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீதான தாக்குதல் குறித்து உடனடி சுயாதீன பக்கச்சார்பற்ற வெளிப்படையான பயனளிக்ககூடிய விசாரணைகளை அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான இயக்குநர் யாமினி மிஸ்ரா வேண்டுகோள் விடுத்துள்ளார். தாக்குதலுக்கு காரணமானவர்களை அதிகாரிகள் நீதியின் முன் நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த தாக்குதலை பார்க்கும்போது அரசாங்கத்திற்கு ஆதரவானவர்கள் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கும் கோ கோத்தா கமவில் காணப்பட்ட கட்டமைப்புகளை அழித்து அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை பலவீனப்படுத்துவதற்கும் பொலிஸார் அனுமதித்துள்ளனர் போல தெரிகின்றது என குறிப்பிட்டுள்ள அவர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் தமது மனித உரிமைகளை வெளிப்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய கடப்பாடு அதிகாரிகளிற்குள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான வன்முறையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான கடப்பாடும் அதிகாரிகளுக்குள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## ரணில் விக்கிரமசிங்க...

தெரிவிக்கின்றன. அதில் பெரும்பான்மை ஆதரவு பொதுஜனபெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுடையதாகும்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 25 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உள்ளிட்ட பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் பதினொரு கட்சிகளின் உறுப்பினர்கள் பலரதும் ஆதரவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான பெரும்பான்மை பாராளுமன்றத்தில் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க நீண்ட அரசியல் வரலாற்றைக் கொண்டவர்.

1993 ஆம் ஆண்டு மே தினத்தன்று கொழும்பில் நடந்த குண்டுத் தாக்குதலில் அப்போது ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாச கொல்லப்பட்டதுடன் அரசியலமைப்புக்கிணங்க அப்போது பிரதமராக பதவி வகித்த டி.பி விஜேதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றார்.

அந்த சந்தர்ப்பத்தில் கைத்தொழில் அமைச்சராகவும், ஆளுங்கட்சியின் பிரதம கொரடாவாகவும் செயற்பட்ட ரணில் விக்ரமசிங்க முதல் முறையாக நாட்டின் பிரதமராக பதவியேற்றார். அதனைத் தொடர்ந்து 1994 ஆம் ஆண்டு வரை அவர் பிரதமராக பதவி வகித்தார்.

அதனையடுத்து 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது காமினி திசாநாயக்க படுகொலை செய்யப்பட்டதையடுத்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக பதவியேற்றார்.

அதன் பின்னர் 1994 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையிலான அரசாங்கத்தில் இரண்டு தடவைகள் பிரதமராக பதவி வகித்துள்ளார்.

அதன் பின்னர் 2004 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதிகளில் எதிர்கட்சித் தலைவராக பதவி வகித்துள்ள ரணில் விக்ரமசிங்க, 2015 ஜனவரி 8ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக நியமிக்கப்பட்டார். அதனையடுத்து 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மையுடன் மீண்டும் பிரதமராகப் பதவியேற்றார்.

இத்தகைய சூழ்நிலையில் 2018 அக்டோபர் 26ஆம் திகதி அவர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டார். எனினும் அந்த ஆண்டில் இடம்பெற்ற குழப்ப நிலை, சர்ச்சைகளுக்குப் பின்னர் டிசம்பர் 17ஆம் திகதி அவர் மீண்டும் பெரும்பான்மையுடன் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அதற்கிணங்க நேற்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க 6வது தடவையாகவும் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

இந்த பதவியேற்பானது இக்காலங்களில் நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.(ஸ)

## மாஸ்டர் சிவலிங்கம்...

முன்னெடுத்து வந்துகொண்டிருந்த கலை ஆளுமையாவார்.

இலங்கையில் சிறுவர்களுக்கு கதை கூறுவதில் விசேட தன்மையினைக் கொண்டிருந்தவரும் மட்டக்களப்பின் பொக்கிஷமாகவும் கருதப்படும் மாஸ்டர் சிவலிங்கம் நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கல்லடியை சேர்ந்த இவர் சிறுவர்களுக்கு கதைகள் கூறுவதில் பிரபல்யம்பெற்றவராகவும் கலைஞராகவும் எழுத்தாளராகவும் பல்திறமைக்கலைஞராகவும் திகழ்ந்துவந்தார்.

காலமான மாஸ்டர் சிவலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் கல்லடியில் உள்ள இல்லத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்று கல்லடி உப்போடை இந்து மயானத்தில் மாலை 4.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

## காலிமுகத்திடலில் சஜித்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலிமுகத்திடலில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து அங்கு பல அரசியல்வாதிகள் சென்றிருந்தனர். எனினும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சென்றபோது மோசமாக தாக்கப்பட்டார்.ஆனால் வேறொரு அரசியல் கட்சியின் தலைவர் சென்ற போது தாக்கப்படவில்லை. அப்படியென்றால் இதன் பின்னணியில் ஏதாவது காரணங்கள் இருக்கும். காலிமுகத்திடல் போராட்டத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சென்ற போது அவர் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனை நாம் ஒருபோதும் அனுதிக்கப்போவதில்லை. அவர் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவர். ஆகவே அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை எம்மால் அனுமதிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

## நான் தெரிவித்த கருத்து...

குறிப்பிட்டார். இதனை ஐக்கிய மக்கள் சக்தி செய்யவில்லை என்றால் மாத்திரமே நான் சுயாதீனமாக இயங்குவேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தான் தெரிவித்த கருத்து சமூக ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஹரீன் எம்.பி. இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே நான் சஜித்துக்கு கூறுகிறேன். அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்குப் புத்திஜீவிகள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். வணங்கிக் கேட்கிறேன். சவாலை ஏற்றுக்கொண்டு எதிர்க்கட்சியினர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்குவதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. நான் கூறியக் கருத்தைத் தவறாகப் புரிந்துக்கொண்டுவர்களே அவ்வாறு கூறுகிறார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

## நாட்டை முன்னோக்கி நகர்த்த...

அவர் உறுதியளித்துள்ளார்.

நேற்று தனது ட்விட்டரில் ஜனாதிபதி இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

நாடு மோசமாக நிலைக்குத் தள்ளப்படுவதைத் தடுக்கவும், முடங்கியுள்ள அரசின் செயற்பாடுகளை மீண்டும் துரிதமாக முன்னெடுக்கவும் ஏதுவாக புதிய அரசை அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும், மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒருவர் பிரதமராக இந்த வாரத்திற்குள் நியமிக்கப்படுவார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு பல்வேறு தரப்பினர் விடுத்த கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும். புதிய அரசாங்கம் அமைந்ததும் இது குறித்து விவாதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மக்களின் உயிர்கள் மற்றும் அவர்களின் உடைமைகளைப் பாதுகாப்பதற்காக அரசு இயந்திரத்தின் தடையற்ற செயல்பாட்டைப் உறுதி செய்ய உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அத்தியாவசிய பொருட்களின் தொடர்ச்சியான விநியோகங்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறேன் எனவும் இன்று ட்விட்டர் சமூக வலைத்தளம் ஊடாக ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

## தமிழர் அரசியல் தீர்வு...

ஏற்பாட்டில் நாட்டின் எதிர்காலம் குறித்த 13 முன்மொழிவுகளை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இன்றைய நாளில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை நாங்கள் வரவேற்கின்றோம். விசேடமாக இந்த முன்மொழிவுகளுக்குள்ளே மேலும் ஒன்றிரண்டு விடயங்களையும் உள்ளடக்குமாறும் நாங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

விசேடமாக இந்த 13 கோரிக்கைகளுக்குள்ளே வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான எந்தவொரு விடயங்களும் இல்லாத காரணத்தினால், அந்த விடயங்களையும் முன்வைக்குமாறு அன்பான வேண்டுகோளினை இந்த நேரத்திலே முன்வைக்கின்றோம்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு சார்ந்த விடயங்களை உள்ளடக்கம் செய்யாத ஒரு எதிர்காலம் இலங்கையில் இல்லை என்ற விடயத்தினையும் சொல்லி இருக்கின்றேன்.

இன்று சர்வதேச ரீதியாக மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, இறுதி யுத்தத்தின் போது நடந்ததாக இருக்கட்டும், அதற்கு பின்னர் நடந்ததாக இருக்கட்டும், இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்த நாட்டிற்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் பதிலளிக்காமல் விட்டாலும் எங்கள் நாட்டிற்கு ஒரு எதிர்காலம் இல்லை என்பதனையும் இந்த இடத்திலே நான் விசேடமாக சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தனியார் மயமாக்கல் மற்றும் சர்வதேச நாணய நிதியம் குறித்த முன்மொழிவுகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்துமாறும் இரா. சாணக்கியன் இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

குறித்த நிகழ்வில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், ஊடகப்பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் 40 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமை ஆணைக்குழு...

இராணுவத்தளபதி மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் வாக்குமூலங்களை பதிவு செய்து கொள்வதற்காக மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி பொலிசார் சந்தேகத்தின் பேரில் அவர்களை கைது செய்துள்ளதுடன் நேற்றுவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதற்கிணங்க அவர்கள் மீண்டும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதனையடுத்து அவர்கள் இருவரையும் தொடர்ந்தும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## நம்பிக்கையில்லா...

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்றம் அன்று கூடும்போது முதல் நடவடிக்கையாக, பிரதி சபாநாயகர் தெரிவும், பின்னர் நிலையியல் கட்டளைகள் ஒத்திவைப்பும், அதையடுத்து ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லா தீர்மானமும் விவாதிக்கப்பட்டு இறுதியில் வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

## புதிய அரசாங்கத்துடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

பதற்றநிலை மற்றும் வன்முறைகள் குறித்துக் கரிசனை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் கடந்த ஏப்ரல் மாதம் வொஷிங்கடனில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் ஆரம்பமாகின.

இப்பேச்சுவார்த்தைகளின் போது தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தூண்டுதலாக அமைந்திருக்கும் வெளிநாட்டுக்கையிருப்புப் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கு அவசியமான உதவிகளை வழங்குமாறு இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியிருக்கின்றது. அதன்படி 300 மில்லியன் தொடக்கம் 600 மில்லியன் வரையான அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதாக சர்வதேச நாணய நிதியம் உறுதியளித்தது.

இந்த நிதி அடுத்த 4 மாதகாலத்திற்குள் உலகவங்கியின் ஊடாக இலங்கைக்குக் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கால அவகாசம்... (03 ஆம் பக்கத் தொடர்)

வலியுறுத்தியதை தொடர்ந்து நேற்று முன்தினம் (11) பாராளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்தை கூட்ட சபாநாயகர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் கட்சித் தலைவர் கூட்டம் ஸூம் முறையில் இடம்பெற்றது. ஆளும் தரப்பின் சார்பில் சபை முதல்வர் தினேஷ் குணவர்தன,முன்னாள் அமைச்சர் அலி அப்ரி ஆகியோர் மாத்திரமே கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசியல் நெருக்கடி,சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அமைதியற்ற நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கு தீர்வு காண பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பாராளுமன்றின் ஊடாக ஏதேனும் தீர்வு காண்பது அவசியம் என்பது சிரேஷ்ட பிரஜைகளின் பிரதான கோரிக்கையாக உள்ளது. ஆகவே சகல தரப்பினரும் நெருக்கடியான சூழ்நிலையை உணர்ந்து ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கிறேன் என இதன்போது சபாநாயகர் சகல கட்சி தலைவர்களிடமும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் பதவி வெற்றிடமாகியுள்ளதை தொடர்ந்து அரசியல் மட்டத்தில் தோற்றம் பெறும் நெருக்கடி நிலைமை குறித்து சகல தரப்பினரும் நன்கு அறிவீர்கள். ஆகவே ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி பிரதமர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும். அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் என சபாநாயகர் தெரிவித்தார்.

## இந்தியாவுக்குள் பிரவேசிக்க... (03 ஆம் பக்கத் தொடர்)

சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழ்நாடு பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வாறு தமிழ்நாட்டுக்கு வரமுயற்சிப்போரில் தடைசெய்யப்பட்டுள்ள எல்.ரி.ரி.ஈ முன்னாள் உறுப்பினர்களும் வருவதற்கு வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அத்துடன் சட்டவிரோத வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துவருவதாகவும் தமிழ்நாட்டு பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஸ)

## நடந்த சம்பவங்களுக்காக ... (03 ஆம் பக்கத் தொடர்)

குடும்பங்களுக்கும், அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன், இதுவரை நடந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து வருத்தமடைகிறேன். வன்முறையை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் அமைதியான சூழலை உருவாக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

## நல்லூரில்... (03 ஆம் பக்கத் தொடர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான தரவுகள் ஆவணமாக்கப்பட்டு திலீபனின் நினைவாலயத்திற்கு முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழினப் படுகொலையை குறிக்கும் மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றிலிருந்து ஆரம்பமாகின்ற நிலையில் முன்னணியினரால் இன அழிப்பினை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தும் செயல் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி மற்றும் மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆவணக் காப்பகத்தின் ஏற்பாட்டில் தமிழினப் படுகொலை நிகழ்வுகள் ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் தீர்வை... (03 ஆம் பக்கத் தொடர்)

இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினம் மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பின் போது, கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க;

ஜனாதிபதி தமது பதவியிலிருந்து இராஜினாமா செய்த பின்னர் பதில் ஜனாதிபதியாக சபாநாயகரை நியமிப்பதன் மூலம் நாட்டை ஸ்திரத்தன்மைக்கு இட்டுச் செல்ல முடியும் என்றும் அதற்கான யோசனைகளையும் அவர் தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் தலைமையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை 6 மாத காலத்திற்கு அமைப்பது அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு யோசனையாகும்.

அதற்கு அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அது தொடர்பான பொது வேலைத் திட்டங்களில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் யோசனை வெளியிட்டிருந்தார். அவ்வாறின்றி ஆறு மாத காலத்திற்காக இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஏனைய கட்சிகளுக்கு வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்துள்ள அவர், அந்த இடைக்கால அரசாங்கத்தில் தேசிய மக்கள் சக்தி உள்ளடங்காது என்றும் அது எதிர்க்கட்சியாக செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## நான் இன்னும்... (03 ஆம் பக்கத் தொடர்)

அவர் கைலாசா என்ற தீவுக்குச் சென்றதாக கூறப்பட்ட நிலையில், அதை நித்யானந்தா 'கைலாசா நாடு' என்று அறிவித்தார். அங்கே இருந்தபடியே அவர், சமூக வலைதளங்களில் சொற்பொழிவாற்றும் வீடியோக்கள் அவ்வப்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், நித்யானந்தா நோயால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டதாக, சமூக ஊடகங்களில் அவர் பேசி பதிவேற்றம் செய்யப்படும் வீடியோக்கள், அவருடைய ஆதரவாளர்களால் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டவை எனவும் சமூக ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, நித்யானந்தா இறந்துவிட்டாரா என்று நெட்டிசன்கள் பலரும் கேள்வி எழுப்பிய நிலையில், நித்யானந்தா அதற்கு விளக்கம் அளிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது. அதில், "27 மருத்துவர்கள் மருத்துவம் பார்த்து வருகிறார்கள். மருத்துவ சிகிச்சையிலிருந்து நான் இன்னும் வெளியே வரவில்லை. பிரபஞ்சத்தின் சக்தியை என் உடல் எப்படி உள்வாங்கி செயல்படுகிறது என்பதை எனக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் ஆய்வு செய்கிறார்கள்.

தினந்தோறும் நடைபெறும் நித்ய பூஜை மட்டும் இன்னும் நிற்கவில்லை. மற்றபடி, வேறு எந்த வேலையையும் நான் செய்வதில்லை. உணவு உண்ண முடியவில்லை, தூங்க முடியவில்லை. என் உடம்புக்கு என்னானது என்றே தெரியவில்லை.

மருத்துவர்களாலும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எனக்கு அறிமுகமானவர்களைக்கூட அடையாளம் கண்டுக் கொள்வதில் சிரமப்படுகிறேன். நான் சாகவில்லை. ஆனால், சமாதி மனநிலையை அடைந்திருக்கிறேன். விரைவிலேயே பரிபூரண நலம் பெற்று திரும்புவேன்" என்று கூறியுள்ளார்.

# விலைமனுக்களுக்கான அழைப்பின் திருத்தம்

## காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம் (CRIWMP)

### நீர்ப்பாசன அமைச்சு

**(தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல்)**

**குறிப்பு: 2022 ஏப்ரல் 27ஆம் திகதி தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரமான விளம்பரம் தொடர்பானது.**

**விலைக்கோரல் இல.: CRIWMP/NCB/VIS/2022/Packages from 18 to 35)**

மேற்குறிப்பிடப்பட்ட விளம்பரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் (VIS) புனருத்தாரண வேலைகளுக்காக விலைமனு கோரல்

முன்னர் திட்டமிடப்பட்ட திகதிகளில் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக மேற்படி ''விலைமனுக்களுக்கான அழைப்பில்'' பின்வரும் கால எல்லைகள் பின்வரும் வகையில் திருத்தப்படுகின்றன.

A) விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கான திகதி மற்றும் நேரம்: 2022 மே 18ஆம் திகதி மு.ப. 10.00 எனத் திருத்தப்பட்டுள்ளது.

B) விலைமனுக்கள் வழங்கப்படும் காலம் 2022 மே 23ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

C) விலைமனுக்கள் திறக்கப்படும் மற்றும் மூடப்படும் திகதி மற்றும் நேரம் - மேற்குறிப்பிடப்பட்ட அதே இடத்தில் 2022 மே 24ஆம் திகதி பி.ப. 2.00 மணி எனத் திருத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுக் கோரல் அழைப்பில் உள்ள ஏனைய சகல விபரங்களிலும் எவ்வித மாற்றமுமில்லை. ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தால் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கப்படுகின்றது.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10**

# மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

## (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் கொழும்பில் நடைபெறுகின்றது)

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் பொரலஸ்கமுவ, கடுவாவல, இல. 184 இல் அமைந்துள்ளதும் கம்பனி பதிவு இல. PV 18666 கொண்டுள்ளதுமான சுசிகோ பேக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் எனும் நிறுவனத்தை கௌரவ நீதிமன்றத்தினால் கலைப்பு செய்வதற்கான கட்டளையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் விடயம் தொடர்பானது.

**வழக்கு இலக்கம்: CHC /74/2021/co**
**தன்மை : கலைப்பு செய்தல்**

ஸ்டெசன் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவட்) லிமிடட்,
இல. 833, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, த.பெ. 1970, கொழும்பு 14.

**மனுதாரர்.**

மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை கலைப்பு செய்வதற்கான மனுவொன்று, 2021 ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு மனுதாரர் சார்பாக சட்டத்தரணி கே. உபேந்த்ர குணசேகர என்பவரினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு 2022 ஜுலை மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றம் முன்னிலையில் விசாரணைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையால், குறித்த மனுவின் அடிப்படையில் கட்டளையை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அதற்கு எதிராக செயற்படுவதற்கு அல்லது ஆதரவளிப்பதற்கு குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் இருப்பார்களாயின் அந்த குறித்த நபருக்கு தற்போதைய செயற்பாடுகளுக்காக அவற்றை விசாரணை செய்வதற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஒப்பம்:- திரு. உபேந்த்ர குணசேகர**
**மனுதாரரின் சட்டத்தரணி**
**இல. 135-1/3, குணசிங்கபுர அலுவலக கட்டிடம்,**
**புனித செபஸ்தியன் வீதி, கொழும்பு 12**

குறிப்பு. அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. கே. உபேந்த்ர குணசேகர, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2022 ஜுலை மாதம் 18ஆம் திகதி பிற்பகல் 06.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி**


## அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பொரலெஸ்கமுவ, பிரிவென வீதி, 189/6ஆம் இலக்கத்தில் வசிக்கும் துனுவில முதியன்சேலாகே சமிந்த சஹன் சமரவீர (தே.அ.அ.இல. 692411323V) ஆகிய என்னால் பொரலெஸ்கமுவ, பிரிவென வீதி, 189/6ஆம் இலக்கத்தில் வசிக்கும் துனுவில முதியன்சேலாகே ருவன் ரன்தெனிய சமரவீர (தே.அ.அ.இல. 752971501V) என்பவருக்கு வழங்கப்பட்ட பிலியந்தலை பிரசித்த நொத்தாரிசு டக்லஸ் சிறிவர்தன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 10098ஆம் இலக்கம் மற்றும் 2014.01.11 ஆம் திகதியிடப்பட்ட அட்டோர்ணி அதிகார பத்திரத்தை 2022.05.03ஆம் திகதி முதல் வலுவிழக்கச் செய்து இரத்துச் செய்யப்படுவதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும் இந்த 10098 இலக்கம் கொண்ட அட்டோர்ணி அதிகார பத்திரம் தெல்கந்த, நுகேகொட பதிவாளர் அலுவலகத்தில் 134/11ஆம் இலக்கப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**துனுவில முதியன்சேலாகே சமிந்த சஹன் சமரவீர**
**2022 மே 03ஆம் திகதி**

## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்



**122**

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

SG YN-4574 பஜாஜ் முச்சக்கர வண்டி 2011 அதியுயர் விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711210810 029949

The Housewives' companion
Classifieds on
Daily News

# Uva Provincial Ministry of Education
## Uva Provincial Council
## Invitation for Bids (IFB)
### Name of the Project: General Education Modernization Project (GEM)
### Package No - GEM/UP/G/2022

### விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்

ஊவா மாகாண கல்வி அமைச்சினால் 2022 ஏப்ரல் 21ஆம் திகதிய தினமின (19ஆம் பக்கம்), Daily News (22ஆம் பக்கம்), தினகரன் (13ஆம் பக்கம்) பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது.

மேற்படி தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பில் ஏற்கனவே விலைக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொண்ட ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மற்றும் விலைக்கோரல் செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களின் கவனத்திற்கு.

2022 மே 13ஆம் திகதி 14.00 மணித்தியாலம் என முன்னர் குறிப்பிடப்பட்டிருந்த விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் மற்றும் திறக்கப்படும் நேரம் 2022 மே 25ஆம் திகதி 13.00 மணித்தியாலம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022 மே 24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2022 ஆகஸ்ட் 10ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். அதேபோல் விலைக்கோரல் பிணை முறி 2022 செப்டெம்பர் 07ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். இதற்கான கட்டளை விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 14 நாட்களுக்குள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னைய விளம்பரத்தில் பிரசுரமான ஏனைய சகல நிபந்தனைகளும் அவ்வாறேயிருக்கும்.

**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண கல்வி அமைச்சு, ஊவா மாகாண சபை,**
**பதுளை.**
**2022-05-12.**
**(விசாரணை - 055-2222814 - தலைமைக் கணக்காளர்)**

# VEHICLES FOR SALE

| Vehicle No. | Make | Model | Year |
|---|---|---|---|
| **LORRY** | | | |
| PP -2XXX | TATA | ACE | 2010 |
| **THREE WHEELER** | | | |
| GR -3XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| QD -1XXX | BAJAJ | AUTO RE2 STROKE | 2005 |
| QE -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QW -0XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |

Vehicle Inspection:
**Mercantile Investments & Finance PLC**
Vehicle Yard - No: 176, Lake Road, Maharagama
Tel - 0112 088 505

**Dates for inspection of vehicles**

13th, 17th, 18th & 19th May 2022 from 9.00 am to 5.00 pm at the above address (Acceptance of tenders will be closed at 5.00 pm 19th May 2022)

Tender forms could be obtained from the Mercantile Investments & Finance PLC Vehicle Yards at the above addresses upon making a non-refundable payment of Rs.200/-. Successful bidders will be notified over the telephone, and they should remove the relevant vehicles within 7 days from the date of notification. The company reserves the right to withdraw any vehicle from the tender without stating any reason. While the successful bidders shall accept the relevant vehicles in the existing condition, any outstanding payment in relation to revenue license and government taxes etc shall have to borne by such bidders.

**Decision of the Mercantile Investments & Finance PLC pertaining to this tender shall be final.**

**Mercantile Investments & Finance PLC**

Mercantile Investments and Finance PLC

**Head Office**
236, Galle Road, Colombo 03.
Tel No. **2343720 - 7** EXT: **210**

Contact:
**Janaka - 071 1624559 / Moditha - 071 9530350**

www.skillsads.com

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## பாத்ததும்பர பிரதேச சபை

2022-04-22ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் போன்ற பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமையினால் மேற்குறிப்பிடப்பட்ட திகதியில் பிரசுரமான விலைக்கோரல் அறிவித்தலின் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2022-05-20ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதேபோல்,

01. விலைக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் 2022-05-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் 2022-05-20ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.


02. முன்னைய விளம்பரத்தின் பிரகாரம் விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்தவர்கள் மீண்டும் ஆவணங்களைக் கொள்வனவு செய்யத் தேவையில்லை.

2022-04-22ஆம் திகதி பிரசுரமான பத்திரிகை விளம்பரத்திலுள்ள ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பாத்ததும்பர பிரதேச சபை.**

**2022-05-12,**
**பாத்ததும்பர பிரதேச சபை அலுவலகத்தில்,**
**தொலைபேசி இல. 081-2476276, 081-2476036,**
**தொலைநகல் இல. 081-2476276**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE



# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2021(2022)

மேற்படி பரீட்சை 2022 மே மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகி ஜுன் மாதம் 01ஆம் திகதி வரை நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள், நேர அட்டவணைகள் ஆகியன உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்கள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2022 மே மாதம் 17ஆம் திகதி வரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை இலக்கம், பாடசாலையின் பெயர், முகவரி போன்ற உரிய தகவல்கள் உள்ளடங்கலாக கடிதமொன்றையோ அல்லது தொலைநகல் மூலமோ எனக்கு அறியத்தரல் வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதித்திகதியில் அல்லது அதற்கு முன்னர் நிகழ்நிலையில் விண்ணப்பித்திருப்பின் அவ்விண்ணப்பப்படிவத்தின் பிரதி, விண்ணப்பப்படிவத்தை அனுப்பிய பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான தபால் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஆகியவற்றுடனும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு உடனடியாக கடிதம் மூலம் அறியத்தரவும். அல்லது நேரடியாக வருகை தந்தும் பெற்றுக் கொள்ள முடியும். பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இது தொடர்பாக அதிகூடிய கவனத்தைச் செலுத்தும்படி இத்தால் அறியத்தரப்படுகிறது.

அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள அனுமதி அட்டைகளில் பாடங்களில் திருத்தம், மொழிமூலத்தில் திருத்தம், பெயர் திருத்தம் ஆகியன செய்ய வேண்டியிருப்பின்:

- **சகல மாற்றங்களையும் நிகழ்நிலையில் மேற்கொள்ள வேண்டும். இதற்காக http://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசித்தல் வேண்டும்.**
- **ஒரு பரீட்சார்த்தி ஒரு தடவை மாத்திரமே மாற்றங்களைச் செய்ய முடியும்.**
- **முறையான பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பெயர் மாற்றங்கள் மாத்திரம் தரவுத்தளத்தில் இற்றைப்படுத்தப்படும்.**
- **பரீட்சை நிலைய மாற்றங்கள் செய்யப்படமாட்டாது.**

**பரீட்சார்த்தி ஒருவருக்குப் பதிலாக வேறொருவர் பரீட்சைக்குத் தோற்றுதல், புத்தகங்கள், குறிப்புக்கள், இலத்திரனியல் சாதனங்களை (உதா:- செல்லிடத் தொலைபேசி, ஸ்மாட் கடிகாரம்....... ஆகியன) பரீட்சை மண்டபத்திற்குள் எடுத்து வருதல், பயன்படுத்துதல், வேறு பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் முறையற்ற நடத்தைகளில் ஈடுபடல் ஆகியன பரீட்சைச் சட்ட விதிகளின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இப்பரீட்சையில் கணித்தற் பொறிகளையும் அழிமையையும் (correcting fluid) உபயோகிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டது.**


**விசாரணைகள்:**

| | | |
|---|---|---|
| தொலைபேசி எண் | : | 011-2784208, 2784537 |
| தொலைநகல் எண் | : | 011 - 2784422 |
| தபால் முகவரி | : | பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை, தபாற் பெட்டி இல. 1503, கொழும்பு. |

**பரீட்சைக் காலங்களில் 24 மணித்தியாலமும் விசாரணைகளுக்காகச் செயற்படும்**
**தொலைபேசி இலக்கங்கள் : 0112785211, 0112785212, 0112784208, 0112784537**
**அவசர அழைப்பு இலக்கம் 1911**

**6/4/சா.தரம்/2021**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2022.05.06 ஆம் திகதி**

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**




## සියපත ෆිනෑන්ස්
## சியபத பினான்ஸ்
## Siyapatha Finance

*(Finance Company of Sampath Bank Group)*

### மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

2022.04.29 மற்றும் 2022.05.03 திகதிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பான தகவல்

2022.05.13 ம் திகதி நடைபெறவிருந்த மீட்கப்படாத தங்க நகைகளுக்கான ஏல விற்பனை நாட்டில் ஏற்பட்டுள்ள நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்

**மீண்டும் ஏல விற்பனை நடைபெறுவது தொடர்பான திகதி அறிவிக்கப்படும்**

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீ.எல்.சீ
இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08

பதிவு இலக்கம்: PB 917PQ

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/09/020 | MS ‘ I ‘ Beam 300 X 150MM 32 KG/M 12M Length | 60,000.00 | 1,000.00 | 02-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/02/051 | Lubricant (HC 46 Lanka ) – 12,600 Liters | 47,600.00 | 1,000.00 | 02-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/07/052 | 4992 Liters, Transynd Synthetic Fluid Tes 295 (AN – 011001 ) | 162,500.00 | 3,500.00 | 02-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/02/054 | Lubricants ( 12600 Liters DS SAE 40 ) | 125,000.00 | 3,500.00 | 03-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/ PT/6305(MP) | Spares for Grove AMZ 131 XT – Aerial Work Platform | 30,000.00 | 1,000.00 | 09-06-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/ PT/6307(MP) | Spares for Caterpillar C – 15 Engine of RTG Cranes at JCT | 120,000.00 | 3,500.00 | 09-06-2022 மு.ப. 10.00 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/ PT/04/056 | Shirts Short / Long Sleeves - 2500 Nos -2022 | 25,000.00 | 1,000.00 | 06-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/12/051 | Spares for UNIC URV 340 (3Ton) Boom Trucks – 03 Nos. | 16,000.00 | 1,000.00 | 03-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/07/051 | Spares for Caterpillar C – 15 Engines of ZPMC 41T RTGC at JCT | 30,000.00 | 1,000.00 | 03-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/10/060 | Sensors for Caterpillar C32 Diesel Engines of Pilot 16,17 & 18 | 25,000.00 | 1,000.00 | 06-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/17/058 | 20 Nos. Roller Chain Super 160 102L for Gantry Travel | 27,000.00 | 1,000.00 | 06-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina
Daily News
Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT


LAKE HOUSE

# பிள்ளைகளுக்கு தேவையான களத்தை அமைத்துக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பு

## அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி கருத்து






பிள்ளைகளுக்கு தேவையான களத்தை அமைத்துக் கொடுக்க வேண்டி பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது. ஆதலால் பெற்றோர்கள் தம் வீட்டுச் சூழலை ஒரு சந்தோசமான சூழலாக மாற்ற வேண்டும். பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு முன்மாதரிமிக்கவர்களாக இருத்தல் வேண்டும். நாம் எப்பொழுதும் குழந்தைகள் இன்னாரைப் போன்று வர வேண்டும் என நாங்கள் அதிகளவு ஆசைகள் வைப்பதிலும் அதிகளவு கனவு காண்பதிலும் எந்த தவறுகளும் இல்லை என அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

முதலாம் ஆண்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் தேசிய நிகழ்வு கண்டி கல்வி வலயத்திற்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டை சாஹிராக் கல்லூரியில் புதிய முதலாம் ஆண்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் விசேட தேசிய நிகழ்வு அதிபர் கலிலுர்ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி கலந்து சிறப்பித்தார்.

முதலாம் ஆண்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் தேசிய நிகழ்வு கண்டி கல்வி வலயத்திற்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டை சாஹிராக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த தேசிய நிகழ்வு அதிபர் கலிலுர் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பெசிய அவர்,.....

கொரோனா தொற்றுக் காலத்தில் எமது மாணவர்களுக்கு சூம் தொழில் நுட்பத்தில் கல்வி போதிக்கப்பட்டது. இக்கல்வி முறை அவர்களுக்கு புதியதாக இருந்தாலும் இப்பிள்ளைகள் பெற்றோர்களின் உதவியுடன் கல்வியைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த வகையில் இம்மாணவர்கள் பழைய மாணவர்களை விட ஒரு படி மேல் சென்று புதிய தொழில் நுட்ப கல்வி முறையில் கல்வி கற்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை வரவேற்கத்தக்க அம்சமாகும்.

எக்கால கட்டத்திலும்; குழந்தைகள் பற்றி பராமுகமாக இருந்துவிடக் கூடாது. ஒவ்வொரு விடயங்களையும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் சரியான வழிகளை காட்டுகின்றோமோ அதேபோல் எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவகையில் காலத்தின் தேவைக்கு ஏற்ப தொழில்வழிகாட்டல் கல்வியையும் வழங்க வேண்டும்.

இதற்கு பெற்றோர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கூடுதலாக தாய்மார்கள் தம் பிள்ளைகள் மீது கவனம் செலுத்தினாலும் அதற்கு சமமாக ஆண்களும் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் தாய், தந்தை இருவரும் சரி சமமான பங்களிப்பைச் செய்ய வேண்டும்.அப்பொழுதுதான் ஒவ்வொரு வீடுகளிலும் நல்லதொரு சூழல் உருவாகும்.

அதேபோன்று பெற்றோர்களாகிய நீங்கள் நேரத்திற்கு வேலை செய்யப் பழகுகிக் கொள்ளுங்கள். அதைப் பார்த்து உங்கள் பிள்ளைகள் பழகிக் கொள்வார்கள். உங்களிடம் காணப்படும் நல்ல பழக்க வழக்கங்களை பிள்ளைகள் பார்த்து பழகிக் கொண்டால் மேலானதாக இருக்கும். ஒவ்வொரு நாளும் ஒரு புதிய விடயத்தை அறிமுகப்படுத்துங்கள். உங்கள் வாழ்க்கையிலே புத்தம் புதிய விடயங்களை நோக்கி நகருங்கள். நான் 58 வயதாகியும் கூட இன்னும் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய இரண்டாவது எம். பி. ஏ பட்டத்தை இவ்வருட இறுதியில் முடிக்கவுள்ளேன்.

பெற்றோர்கள் தம் வீட்டில் கல்விச் சூழலை உருவாக்குதல் வேண்டும். பெற்றோர்களும் கல்வி கற்றல் மிக முக்கியம். இன்றைய இளம் பெற்றோர்களும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் மேலும் முயற்சிகள் எடுக்க வேண்டும். உங்களிடம் இல்லாததை உங்கள் குழந்தைகளிடம் எதிர்பாக்க முடியாது. எனவே நீங்கள் பிள்ளைளுக்கு வழிகாட்டுதலை மேற்கொள்ளவதோடு அதற்கப்பால் தாங்களும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தளத்தையும் பெற்றோர்கள் ஏற்படுத்திக் கொள்வது இன்றைய தேவையாகும்.

உலகில் மிகவும் சிறப்பான தொழில் ஆசிரியர் தொழிலாகும். இவ்வாசிரியர்களால் தான்; எல்லாத்துறையினர்களையும் உருவாக்க முடியும். ஆசிரியர்கள் தான் உலகத்தில் முதன்மைவாய்ந்த தொழிலைச் செய்கின்றார்கள்.

எல்லா நபிமார்களும் முதலில் ஆசிரியராகத் தான் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டார்கள். மக்களது எழுச்சிக்காக எதுவிதமான பலா பலன்களையும் எதிர்பாராமல் பாடுபட்டுள்ளார்கள். மனிதனது விரிவான சிந்தனைகளுக்கு திறவுகோலாகத் திகழ்ந்துள்ளார்கள்.



எனவே எங்களிடையே காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்பட வேண்டும். ஆரம்ப காலத்தில் கல்வி கற்பிக்கும் முறையில் ஒரு கொள்கைத் திட்டம் இருந்தது. ஆனால் தற்போது அது இல்லை. அது கற்றல் கற்பித்தில் ஊடாகத்தான் பிள்ளைகளைப் படிப்பித்தல் வேண்டும். நாமும் கற்றல் கற்பித்தல் முறையில் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். கற்றுக் கொண்டே கற்பிப்பவன் தான் ஒரு சிறந்த ஆசிரியன். அந்த வகையில் ஆசிரியர்களாக இருந்தால் என்ன அல்லது பெற்றோர்களாக இருந்தால் என்ன இரு சாராரும் மென் மேலும் கற்றலை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக ஒவ்வொரு ஆசிரியர்களிடத்திலும் உள்ளத்தில் ஒரு விடயம் இருக்க வேண்டும்.

அதாவது ஒரு ஆசிரியர் ஓய்வு பெறும் போது தான் இத்தனை மாணவனை உருவாக்கினேன் என்ற எண்ணம் இருத்தல் வேண்டும. குறிப்பாக ஒரு உயர் பதவியில் இருக்கக் கூடிய மாணவனை தானே உருவாக்கினேன் என்று அழுத்தமாகச் சொல்ல வேண்டும்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் வெளிநாடுகளில் நல்ல உயர் பதவிகளில் தொழில் புரிகின்றார்கள். என் துணைவியார் கடந்த 20 வருடமாக இப்பாடசாலையில் சேவையாற்றிய ஒருவர். அந்த மாணவர்கள் இன்னும் தொடர்போடு இருக்கின்றார்கள் எனில் இப்பாடசலையில் நல்ல மாணவர்கள் உருவாகியுள்ளார்கள் என்று ஈண்டு குறிப்பிட முடியும்.

நான் அகில இலங்கை வை. எம். எம். ஏ.பேரவையின் கண்டி மாவட்ட அமைப்பாளராக இருக்கும் போது இப்பாடசாலை மாணவர்கள் குத்துச் சண்டையை ஊக்குவிப்பதற்காக அதற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை பெற்றுத்தருமாறு என் மனைவியின் ஊடாக வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அக்கால கட்டத்தில் வை. எம். எம். ஏ. ஊடாக அதனைப் பெற்றுக் கொடுத்தேன். இந்தப் பாடசாலையை கட்டி எழுப்புவதற்காக கண்டியிலுள்ள பல்வேறு பட்ட சமூக அமைப்பினர்கள் இதய சுத்தியுடன் செயற்பட்டு வருகின்றார்கள். கண்டி மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனம், பாகிஸ்தான் நாட்டு விதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார். யங் பிரண்ஸ் அமைப்பு, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஏ. ஜீ. பசான் முஹமட் , றசீட் பழைய மாணவர்கள் ஸம் ஸம் பவுண்டேசன், தனவந்தர்கள் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என இன்னும் பலரையும் குறிப்பிடலாம்.







### அதிபர் ஏ.எச். கலிலுர்ரஹ்மான் உரையாற்றும் போது...

சாஹிராக் கல்லூரி வளர்ச்சியில் சற்று தொய்வு ஏற்பட்டுள்ள காலத்தில் அதன் அதிபராக கடமையேற்று இன்று வரையிலும் பாடசாலையின் கல்வி மேம்பாட்டுக்காக சேவையாற்றி வருகின்றேன்.

இப்பாடசாலையை கட்டி எழுப்புவதற்காக பாடசாலை அபிவிருத்திக் குழு, ஆசிரியர்கள், பழைய மாணவர்கள். அரசியல்வாதிகள், கண்டி மஸ்ஜித் சம்மேளனம், யங்பிரன்ஸ் இயக்கம், கட்டுகஸ்தோட்டை இஸ்லாமிய நலன்புரிச் சங்கம். அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை போன்ற அமைப்புக்களின் உதவியுடன் பாடசாலைகளின் கல்வி, விளையாட்டு, பௌதீக வள அபிவிருத்தி போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கு தேவையான மூன்று ஆண்டுத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கண்டி நகரில் முஸ்லிம் ஆண் பாடசாலையொன்று இல்லாத குறையை நிவர்த்தி செயவற்கான ஆரோக்கியமானதொரு சூழல் இப்பாடசாலையில் நிலவுகின்றது. கண்டியில் ஆண் பாடசாலை தேவை குறித்து நீண்ட காலமாக வலியுறுத்தப்படும் நிலையில் கண்டி மாநகர சபைக்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டை நகரில் அமைந்துள்ள சாஹிரா ஆண்கள் பாடசாலை அதற்குத் தீர்வாக கல்வி எழுச்சி பெற்றுவருதை அவதானிகக் கூடியதாக இருக்கின்றது.

எனவே பெற்றோர்களாகிய உங்களுக்கு இன்றிலிருந்து கடமை ஆரம்பித்து விட்டது. இது உங்கள் பாடசாலை. நீங்கள் எந்தளவுக்கு பிள்ளைகள் மீது அதிகளவு அன்பு செலுத்துகின்றீர்களோ அந்தளவுக்கு பாடசாலை மீதும் அன்பு செலுத்துங்கள்.





### கண்டி கல்வி வலய விளையாட்டுத் துறை ஆசிரியர் ஆலோசகர் எம்.ஏ.ஆர். எம். ரிஸ்னி உரையாற்றும் போது...

இப்பாடசாலையில் தமிழ், சிங்கள மொழி மூலம் தரம் ஒன்றுக்கான மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இலங்கையில் காணப்படுகின்ற பாடசாலைகளில் பல மொழிகளிலும் கல்வி கற்பிக்கப்படுகின்ற ஆண்கள் பாடசாலையாக கண்டி சாஹிரா ஆண்கள் பாடசாலை காணப்படுகின்றது. இப்பாடசாலையில் மாணவர்களுக்கான கல்வி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் தான் இப்பாடசாலைக்குப் பெற்றோர் அதிகளவிலான மாணவர்களை போட்டி போட்டுக் கொண்டு அனுமதித்திருக்கின்றார்கள். எனவே மாணவர்களின் கல்வி நடவடிக்கை சம்பந்தமாக இப்பாடசாலை முக்கியமான பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றது. எதிர்காலத்தில் சாஹிரா மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு பாடசாலை நிர்வாகத்திற்கு இருக்கிறது. இதற்கான ஒத்துழைப்பினை சிறந்த முறையில் வழங்க வேண்டும். கண்டியில் ஆண்கள் பாடசாலையில்லை என்ற வெற்றிடத்தை இப்பாடசலை நிரப்பிக் கொண்டிருக்கின்றது.

எனவே இப்பாடசாலையின் வளர்ச்சி முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சியாகக் கருதப்படுகின்றது. மேலும் இப்பாடசாலையின் கல்வி மாத்திரமல்லாமல் இணைப்பாட விதானத்தில் விளையாட்டுத் துறையில் பல சாதனைகள் படைத்த பாடசாலையாக காணப்படுகின்றது. இப்பாடசாலையின் குத்துச் சண்டை, கராட்டி, கிரிகெட், றகர், காற்பந்து, மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் மாணவர்கள் அகில இலங்கை மட்டத்தில் பல பதக்கங்களைப் பெற்று இப்பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா தொற்றால் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டமையினால் கல்லூரியின் இடப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் மற்றும் பாடசாலைக்கு கேட்போர் கூடம் இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் வகுப்பறைகளுடன் கூடிய நான்கு மாடி கட்டடத்தை தனவந்தர்களின் உதவியுடன் கட்டுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் எமது கல்லூரிக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பாடசாலைக்குத் தேவையான நவீன வசதிகளுடன் கூடிய கனணி தொழில் நுட்ப கூடம் ஒன்றை நிர்மாணித்துத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

அத்தோடு அண்மையில் பல்வேறு அமைப்புக்களின் நிதி உதவியுடன் ஸ்மாட் வகுப்பறை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் கடந்த காலங்களில் சேறும் சகதியுமாக காணப்பட்ட பாடசாலை நுழைவாயில் நலன் விரும்பிகளின் உதவியுடன் சீமெந்து கற்கள் பதித்து புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மிகத் துரிதமாக வளர்ந்து வரும் கண்டி சாஹிரா ஆண்கள் கல்லூரிக்கு அனைத்து வகையிலும் உதவி புரிந்து வரும் அனைவருக்கு இறைனைப் பிரார்த்திப்பதோடு மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தலைசிறந்த பாடசாலையாக திகந்து வருகின்றது என்பதில் ஐயமில்லை.

இந் நிகழ்வில் கண்டி கல்வி வலயத்தின் விளையாட்டுத் துறை ஆசிரிய ஆலோசகர் எம். ஏ. ஆர். எம். ரிஸ்னி, இலங்கை வானொலி புகழ் பிரபல்யமான மார்க்க உலமா மௌலவி இப்றாஹீம், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் பசான் முஹமட் பெற்றோர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.





**இக்பால் அலி...**

# ஆசிய தகுதிகாண் ஹொக்கியில் இலங்கை தோல்வி



ஆசிய வி ளையாட்டு விழா ஹொ க்கி போட்டிக்கு அணிகளை தேர்ந்தெடுக்கும் நோக்கில் தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்று வருகின்ற ஆடவருக்கான ஹொக்கி தகுதிகாண் போட்டியில் பி குழுவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி, கடந்த (10) பங்களாதேஷிடம் 3 – 1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் பங்களாதேஷ் ஹொக்கி அணி ஆசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றும் வாய்ப்பை உறுதி செய்தது. இந்த ஆண்டு சீனாவில் நடைபெற விருந்த ஆசிய விளையாட்டு விழா கொரோனா வைரஸ் பரவல் காரணமாக 2023 வரை ஒத்திவைக்கப்பட்டது. எனினும், ஆசிய விளையாட்டு விழாவில் இடம்பெற்றுள்ள போட்டி நிகழ்ச்சிகளுக்கான தகுதிகாண் போட்டிகள் திட்டமிட்டவாறு நடத்தப்படுகின்றன.

இந்த நிலையில் ஆசிய விளையாட்டு விழா ஆடவர் ஹொக்கியில் பங்குபற்றவுள்ள அணிகளை தேர்ந்தெடுகின்ற தகுதிகாண் போட்டிகள் தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்று வருகின்றது.

9 நாடுகள் பங்குபற்றியுள்ள இந்த தகுதிகாண் போட்டியில் பி குழுவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி, நேற்று நடைபெற்ற போட்டியில் பங்களாதேஷை எதிர்கொண்டது. போட்டியின் 44ஆவது நிமிடத்தில் விபுல் வர்ணகுல இலங்கைக்காக கோல் ஒன்றை பெற்றுக்கொடுத்தாலும், போட்டியின் 18, 23 மற்றும் 53 ஆகிய நிமிடங்களில் பங்களாதேஷ் அணி 3 கோல்களை அடித்து அசத்த, 3க்கு 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டியது.

முன்னதாக கடந்த 7ஆம் திகதி சிங்கப்பூருக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 5 – 2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றிருந்தது. இலங்கை ஆண்கள் ஹொக்கி அணி இறுதியாக 2014ஆம் ஆண்டு தென் கொரியாவின் இன்ச்சியோங்க் நகரில் நடைபெற்ற 17ஆவது ஆசிய விளையாட்டு விழாவுக்கு தகுதிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தேசிய கால்பந்து அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளர்கள்

*திருகோணமலை குறூப் நிருபர்*





இலங்கை கால்பந்து சம்மேளனம், இலங்கை ஆடவர் கால்பந்து அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளராக என்டி மொர்ரிஸனையும், உதவிப் பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்தின் கெய்த் ஸ்டீவன்ஸினையும் நியனம் செய்திருக்கின்றது.

கட்டாரின் Aspire Foundation உடன் மேற்கொண்ட உடன்படிக்கைக்கு அமைய அடுத்த மூன்று ஆண்டுகளில் இலங்கையின் கால்பந்து விளையாட்டினை வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்லும் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளரின் நியமனம், இலங்கை கால்பந்து சம்மேளனம் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

மென்சஸ்டர் சிட்டி கால்பந்து கழகத்தின் முன்னாள் தலைவரான என்டி மொர்ரிஸன், அந்த கால்பந்து கழகத்திற்காக 1998 தொடக்கம் 2002 வரையிலான காலப்பகுதியில் கால்பந்து போட்டிகளில் ஆடியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மொர்ரிஸன் ஹேடர்ஸ்பீல்ட் டவுன் , பிளக்பூல் மற்றும் பளக்பேர்ன் ரோவேர்ஸ் போன்ற அணிகளையும் பிரதிநிதித்துவம் செய்திருக்கின்றார்.

அத்துடன் மொர்ரிஸன், வேல்ஸ் தேசிய லீக்கில் , Connah's Quay Nomads கால்பந்து கழகத்தின் வெற்றிகரமான பயிற்றுவிப்பாளராகவும் முகாமையாளராகவும் 2015 தொடக்கம் 2021 வரையிலான காலப்பகுதியில் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆடவர் கால்பந்து அணியின் பயிற்சியாளராக கடந்த இரண்டு ஆண்டுகளாக செயற்பட்ட பொஸ்னியாவினைச் சேர்ந்த அமிர் அலஜிக்கின் இடத்தினையே மொர்ரிஸன் நிரப்பவிருக்கின்றார். இலங்கை தேசிய அணியின் முன்னாள் தலைமைப் பயிற்றுவிப்பாளரான அமிர் அலஜிக் இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை கால்பந்து அணியுடனான உறவினை அண்மையில் நிறைவு செய்தார்.

மறுமுனையில் புதிய உதவிப் பயிற்றுவிப்பாளராக மாறியிருக்கும் கெய்த் ஸ்டீவன்ஸ் பிரீமியர் லீக்கில் இதுவரை 557 தடவைகள் பிரசன்னமாகியிருப்பதோடு, மில்வோல் அணிக்காக 1980 தொடக்கம் 1999 வரையிலான காலப்பகுதியில் கால்பந்து போட்டிகளில் ஆடியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் லீக்குகளில் பணியாற்றிய பாரிய அனுபவத்தினை கொண்டிருக்கும் கெய்த் ஸ்டீவன்ஸ், இலங்கை கால்பந்து அணியில் வீரர்களின் திறன் விருத்திக்கு உதவியாக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இலங்கை கால்பந்து சம்மேளனம் புதிய கோல்காப்பு பயிற்சியாளர் ஒருவரினை எடுப்பதற்கும் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக நியமனம் பெற்றிருக்கும் பயிற்சியாளர்கள் இருவரும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வரவிருப்பதோடு, இலங்கை வந்ததன் பின்னர் ஏஎப்சி கிண்ண தகுதிகாண் போட்டிகளுக்காக இலங்கை கால்பந்து அணியினை தயார்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மற்றொரு வெளிநாட்டவரான மார்கொஸ் உடற்தகுதி பயிற்சியாளராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் நிலையில், வரலாற்றில் இலங்கை ஆடவர் கால்பந்து அணி நான்கு வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்களை கொண்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இதுதவிர இலங்கை கால்பந்து அணியில் திறமையினை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கால்பந்து போட்டிகளில் ஆடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவிருப்பதோடு, அவர்களுக்கு தொடர்ச்சியாக கட்டாரின் Apsire Academy இல் பயிற்சிகளை பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

44th
OBSERVER SLT-MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL
The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :..........
வாக்களித்தவர் பெயர் :..........
முகவரி :..........
தொலைபேசி இல. :..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 14-05-2022 இல. 07

Non-Stop வொக்கா
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
SLTMOBITEL
www.sltmobitel.lk

# காற்பந்து சுற்றுப் போட்டியில் சுப்பர்சொனிக்; விளையாட்டுக் கழக அணி சம்பியன்

*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*



அட்டாளைசசேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையிலான காற்பந்து சுற்றுப் போட்டியில், அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டி, சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அட்டாளைச்சேனை அஷ்ரஃப் ஞாபகார்த்த பொது விளையாட்டு தைமானத்தில், அட்டாளைசசேனை பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற காற்பந்து இறுதிப் போட்டியில்;, சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியினரும், எவர்டொப் விளையாட்டுக்கழக அணியினரும் மோதினர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபிரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.அஷ்வத் காற்பந்து சுற்றுப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தார்.

இறுதிப் போட்டியில் இரு அணிகளின் வீரர்களும் சிறப்பாக விளையாடி தங்களது திறமையை வெளிக்கொணர்ந்தனர். போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா2022, காற்பந்து சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டியுள்ள சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் மாவட்ட மட்ட காற்பந்து சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளது.

# வங்கிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி

*சாவகச்சேரி விசேட நிருபர்*



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் வங்கிகளுக்கு இடையிலான 5பந்துப் பரிமாற்றம் கொண்ட விலகல் முறையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் ஆரம்பமானது.இதன் இறுதிப்போட்டிகள் கடந்த 08/05/2022 ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத் தலைவர் ந.தேவரூபன் தலைமையில் இடம்பெற்றது.

எட்டு வங்கிகள் பங்குபற்றிய துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் இலங்கை வங்கியை 18ஓட்டங்களால் தேசிய சேமிப்பு வங்கி வெற்றி கொண்டது.அத்துடன் இரண்டாம் இடத்தை இலங்கை வங்கியும்,மூன்றாம் இடத்தை மக்கள் வங்கியும் தமதாக்காக்கொண்டன .

சுன்னாகம் இலங்கை வங்கி,யாழ்ப்பாணம் செலான் வங்கி,கிருபா லேணர்ஸ், கஜா விருந்தினர் விடுதி,சுன்னாகம் கொமர்ஷல் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக ரோட்டரிக் கழக மாவட்ட உதவி ஆளுநர் ரோட்டரியன் ந.சுகந்தன், விசேட விருந்தினராக இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ப.சிவானந்தன்,கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் புவனேந்திரராஜா, செலான் வங்கி யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் குனேந்திரன்,சுன்னாகம் கொமர்ஷல் வங்கி நிறைவேற்று உத்தியோகத்தர் பு.சயந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.